Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk

MONDAY, JANUARY 02, 2023

திங்கட்கிழமை, ஜனவரி 02, 2023 | ஒளி: 08 கதிர்: 177 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# உள்நாட்டு இறைவரி சட்டம் அமலாகியது



பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்ட உள்நாட்டு இறைவரி (திருத்தம்) சட்டம், ஞாயிற்றுக்கிழமை (01) முதல் அமலாகியது. சட்டமூலத்தின் சான்றிதழை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, கடந்த 19ஆம் திகதியன்று அங்கிகரித்திருந்தார்.

புதிய வரி விதிப்பு முறையானது மாத வருமானத்தின் மீது அசாதாரணமான அதிகபட்சமாக 36% வரி வரம்புகளை விதிக்கும். ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் மாதாந்த வருமானம் ஈட்டுபவர்களுக்கு 6% இல் இருந்து குறைந்தபட்ச வரி வீதம் ஆரம்பிக்கும்.

முழுச் செய்தி P3

மட்டு. தரவை மாவீரர் துயிலும் இல்ல அபகரிப்பு

# ஜனாதிபதியுடனான பேச்சை புறக்கணிக்க வேண்டும்


■ புதனன்று போராட்டத்துக்கும் அழைப்பு

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, தரவை மாவீரர் துயிலும் இல்லப் பகுதியை இராணுவ புலனாய்வு பிரிவு, இராணுவ ஒட்டுக்குழுக்கள் சூறையாடும் ஈனச்செயல் நடந்து கொண்டிருக்கின்றது என்று தெரிவித்த தரவை மாவீரர் இல்ல ஏற்பாட்டுகுழு தலைவர் லவக்குமார், மாவீரர் துயிலும் இல்லத்திற்கு தீர்வு கிடைக்காவிடின் ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தைகளை தமிழ்த் தேசிய கட்சிகள் புறக்கணிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# கொரோனா தீவிரம்; இலங்கை அவதானம்



சர்வதேச நாடுகளில் கொரோனா தொற்று அதிகரிக்கின்றமை குறித்து தொடர்ச்சியாக அவதானித்து வருவதாகவும் விசேட வைத்திய நிபுணர்களுடன் இந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடி மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் மற்றும் பரிந்துரைகளுக்கு அமைய, மேலதிக அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

பஸ்ஸை செலுத்தி தலைவராக முடியாது

# சஜித்துக்கு பொன்சேகா சாட்டையடி



பஸ்களை செலுத்துவதன் மூலமோ அல்லது பஸ்களுக்கு தீ வைப்பதன் மூலமோ ஒருவர் தலைவராக முடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

ஞாயிற்றுக்கிழமை (01) இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

பஸ்களை செலுத்துவது தலைவர் ஆகுவதற்கான தகுதி இல்லை என்றும் (சஜித்) பஸ்ஸொன்றை நன்கொடையாக வழங்கி அதை செலுத்தியதன் மூலம் ஓரளவு திருப்தியடைய வேண்டும் என்றார்.

தொடர்ச்சி P2

பிணை கிடைத்ததும்

# கம்பி நீட்டினார் 'கஞ்சிப்பானை'



பிணை நிபந்தனைகளை பூர்த்திசெய்ததையடுத்து, கடந்த டிசெம்பர் மாதம் 20ஆம் திகதியன்று பிணையில் விடுவிக்கப்பட்ட பிரபல பாதாள உலக உறுப்பினரான 'கஞ்சிப்பானை இம்ரான்' என்றழைக்கப்படும் மொஹமட் நஜீம் இம்ரான், தமிழகத்தின் இராமேஸ்வரத்துக்குள் நுழைந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தியாவின் இராமநாதபுரம் மாவட்டத்துக்குள் டிசெம்பர் 25 ஆம் திகதியன்று இம்ரான் நுழைந்ததாகவும் அவரையும் அவரது சகாக்களையும் கண்காணிக்குமாறு தமிழக கடலோர மாவட்டங்களில் உள்ள சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு தமிழக புலனாய்வுப் பிரிவினர் தகவல் வழங்கியுள்ளனர்.

தொடர்ச்சி P2



# பூ பனிப்பொழிவு

புத்தாண்டு தினமான ஞாயிற்றுக்கிழமை (01) நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மழையில்லாத வானிலையே காணப்பட்டது. நுவரெலியா மாவட்டத்திலும் பூ பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. இந்தப் பூ பனிப்பொழிவை இன்னும் சில நாள்களுக்கு பார்க்கலாம் என வளிமண்டலவியல் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் எதிர்வுகூறியுள்ளார்.

# ஜனவரி இறுதிக்குள் அமைச்சரவை மாற்றம்

ஜனவரி மாத இறுதிக்குள் அமைச்சரவையில் மாற்றம் செய்யப்பட இருப்பதோடு, ஆறு மாகாணங்களுக்கான ஆளுநர்களையும் நியமிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

# புத்தாண்டை வரவேற்ற 50 பேர் வரை காயம்



2023 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இடம்பெற்ற பட்டாசு வெடிப்பு உள்ளிட்ட பல்வேறான விபத்துகளில் காயமடைந்த சுமார் 50 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சனிக்கிழமை (31) நள்ளிரவு முதல் ஞாயிற்றுக்கிழமை (01) நண்பகல் வரையிலான காலப் பகுதியிலேயே குறித்த விபத்துகள் பதிவாகியுள்ளதாக தெரியவருகிறது.

பட்டாசு வெடித்ததில் காயமடைந்த நான்கு பேரும் வீதி விபத்துகள் மற்றும் ஏனைய விபத்துகளில் காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# நீர்க் கட்டண அதிகரிப்பு நிச்சமாக இடம்பெறும்

## அமைச்சரவைக்கு வருகிறது மின் கட்டண யோசனை



குடிநீர் விநியோகத்துக்காக அதிகளவு மின்சாரம் செலவிடப்படுவதால், மின் கட்டண அதிகரிப்பின் காரணமாக நீர் கட்டணமும் நிச்சயமாக அதிகரிக்கும் என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குடிநீர் விநியோகத்தில் நீரைச் செலுத்தும் பணிக்கு அதிகளவு மின்சாரம் தேவைப்படுவதால், மின் கட்டணத்தை உயர்த்தினால், அதற்கேற்ப குடிநீர் கட்டண உயர்வை தடுக்க முடியாது என்று அவர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

# வார இறுதி நீண்டதொரு விடுமுறையை கொண்டது 2023

பிறந்திருக்கும் புத்தாண்டில், பொது மற்றும் வர்த்தக விடுமுறைகள் வெள்ளி மற்றும் திங்கட்கிழமைகளில் வருவதால், 2023 ஆம் ஆண்டு வார இறுதி நீண்ட விடுமுறை நாள்களைக் கொண்ட ஆண்டாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சுதந்திர தினம், நவம் பௌர்ணமி, மஹா சிவராத்திரி, ரம்ழான், பொசன் போயா, வப் போயா, தீபாவளி, போன்ற சில பொது விடுமுறைகள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வருகின்றன.

தொடர்ச்சி P2



# ஜனாதிபதி மாளிகையில் 39 ஓவியங்கள் மாயம்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக கடந்த வருடம் ஜூலை 9ஆம் திகதி நடத்தப்பட்ட மக்கள் போராட்டத்தை அடுத்து, ஜனாதிபதி மாளிகைக்குள் போராட்டக்காரர்கள் நுழைந்த பின்னர், அங்கிருந்த 39 ஓவியங்கள் மற்றும் சித்திரங்கள் காணாமல் போயுள்ளன.

தொடர்ச்சி P2

# அரச ஊழியர்களுக்கு விசேட முற்பணம்



அரச ஊழியர்களுக்கு 2023ஆம் ஆண்டு விசேட முற்பணத்தை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்த முற்பணம் அதிகபட்சமாக 4,000 ரூபாய்க்கு உட்பட்டதாக இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முற்பணத்தை ஜனவரி 1 ஆம் திகதி முதல் பெப்ரவரி 28ஆம் திகதி வரை மட்டுமே செலுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

ஓய்வு பெறும் ரயில்வே ஊழியர்களை

# சேவையின் தேவைகருதி தக்கவைக்க அனுமதி



சேவையின் தேவை கருதி, சனிக்கிழமையுடன் (31) ஓய்வு பெறவிருந்த இலங்கை ரயில்வே திணைக்கள ஊழியர்களை, தேவைப்பட்டால் ஒப்பந்த அடிப்படையில் தக்கவைத்துக் கொள்ள ஜனாதிபதியின் செயலாளரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏகநாயக்க, இலங்கை ரயில்வே திணைக்களத்தின் பொது முகாமையாளருக்கு எழுதிய, கடிதத்திலேயே மேற்குறிப்பிட்ட அனுமதியை வழங்கியுள்ளார்.

வருட இறுதியுடன் ஓய்வு பெறவிருந்த ஊழியர்களை தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்ளுமாறு பல்வேறு ரயில்வே தொழிற்சங்கங்களால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இளநிலை பணியாளர்களின் சேவை இல்லையெனில், சில நிலையங்கள் இயங்காது என அவர்கள் கருதிய நிலையில்,

தொடர்ச்சி P2

සුබ
சுப
නව වසරක්
நவ வசரக்
වේවා!
வேவா!

இவ்வளவு காலமும் ஒரே நாட்டிற்குள் மொழியின் காரணமாக நாம் பிரிந்திருந்தோம். 2023 ஆம் புத்தாண்டில், எம்மைப் பிரித்த மொழிகளை அர்த்தப்படுத்தும் வகையில் புதுவிதமாக பிரார்த்திப்போம். நாம் அனைவரும் மற்றவரினது மொழியைக் கற்றுக்கொண்டு, அந்த மொழியில் ஒருவருக்கொருவர் வாழ்த்துக் கூறுவோம். அவ்வாழ்த்திற்கு அப்பாற்பட்ட அன்பான உணர்வுடன் ஒருவரையொருவர் புரிந்து கொள்வதற்கு இந்த புத்தாண்டில் எமக்கு வாய்ப்பு கிட்டட்டும்!

#SRILANKANWISH

முன்முயற்சியாளர்கள்

PAGE 1 தொடர்ச்சிகள்

# ஜனாதிபதியுடனான பேச்சை புறக்கணிக்க வேண்டும்

மட்டக்களப்பு ஊடக மையத்தில் ஞாயிற்றுக்கிழமை (01) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், “கடந்த 30ஆம் திகதியன்று மட்டக்களப்பு தரவை மாவீரர் துயிலும் இல்லப் பகுதியில் 500க்கு மேற்பட்ட குழிகளை வெட்டி மரக்கன்றுகளை நாட்டுவதாகவும் அதனை வனவள திணைக்களத்தால் செய்யப்படுவதாக மாவீரர் எற்பாட்டுக் குழுவான எனக்கும் நிதர்ஷன் ஆகியோருக்கு தொலைபேசி ஊடாக தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக வனவள திணைக்கள காரியாயத்திற்கு சென்றபோது அவர்கள் அதை மறுத்த நிலையில், அந்தப் பகுதிக்கு உடனடியாக நாங்கள் சென்றபோது இராணுவ புலனாய்வு பிரிவினரும் ஒட்டுக்குழுக்களும் மற்றும் பிள்ளையான் கட்சியில் செயற்பாட்டில் இயங்குகின்ற கூளாவடியைச் சேர்ந்தவரும் இணைந்து இந்தக் குழிகளை வெட்டிக் கொண்டிருந்தனர்.

நாங்கள் அதனை தடுத்து நிறுத்தினோம். அதன் பின்னர் 30 திகதி இரவு மீண்டும் குழிகள் வெட்டப்பட்டு மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

மிகவும் முக்கியமான தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் இவ்வாறான ஈனச்செயல்களை கடந்த காலங்களிலே செய்து கொண்டுவந்போது இதனை யார் செய்து கொண்டுவந்தார்கள் என்ற அறியமுடியாத சூழல் இருந்தது.

ஆனால், இப்போது தெரியவந்துள்ளது. இராணுவப்புலனாய்வு பிரிவும், இராணுவமும் ஒட்டுக்குழுக்களும் சேர்ந்தே இதைச் செய்கின்றனர் என்பது வெளிப்படையாக அப்பட்டமாக அம்பலமாகியுள்ளது.

இவ்வண்ணமாக செய்திகள் வருகின்றபோது, மாற்று கட்சிகள் தடுத்து நிறுத்தியதாக ஊடகங்கள் ஊடாக புலனாய்வு பிரிவினர் செயற்பட்டு, அந்தச் செய்திகளை பொய்யான விதத்தில் பரப்பியிருந்தனர். அதனை செய்த ஊடகங்களை வன்மையாக கண்டிக்கின்றோம்.

ஜனாதிபதி ரணில் எதிர்வருகின்ற சுதந்திர தினத்துக்கு முன்பதாக தமிழர்களுக்கு தீர்வுதருவேன் என்றும் பேச்சுக்கு வாருங்கள் என்று சொல்லிவிட்டு, ஆயிரக்கணக்கான எமது புனிதர்களான மாவீரர்கள் புதைக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களை சூறையாடுகின்ற வேலைத்திட்டத்தை மறைமுகமாக அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.


இவ்வாறான நிலையில், தமிழ்த் தேசிய கட்சிகள், தமிழ்த் தேசிய உணர்வாளர்கள், தமிழ் தேசத்தில் மண்பற்றுள்ள அனைவரும் ஒன்று கூடவேண்டும். ஏனென்றால் இவ்வாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் ஈனச்செயல்கள் நடந்து கொண்டிருக்கின்ற நிலையில், தமிழ்த் தேசிய கட்சிகள் பேச்சுவார்த்தைக்கு போவார்களாக இருந்தால், அவர்கள் கண்டிக்கப்பட வேண்டும்.

அதேவேளை, மாவீரர் துயிலும் இல்லத்திற்கு தீர்வு கிடைத்தால்தான் பேச்சுக்கு வருவோம் அல்லது வரமாட்டோம் என, பேச்சுவார்த்தையில் இருந்து வெளியேறவேண்டும். இதனை நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

இது எங்கள் புனித மண்; தமிழர்கள் வாழுகின்ற பூமி. இந்தப் பூமியை மீட்டெக்க வேண்டிய கட்டாய கடமைகளும் பொறுப்பும் உத்தரவாதமும் எங்களுக்கு இருக்கின்றது. எனவே மாவீரர் துயிலும் இல்லத்தை மீட்பதற்கான போராடம் எதிர்வரும் 4ஆம் திகதி புதன்கிழமை 10 மணிக்கு மாவீரர் துயிலும் இல்லத்தில் இடம்பெறும்.

இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய கட்சிகள், தமிழ்த் தேசிய உணர்வாளர்கள், மண்பற்றாளர்கள் சிவில் சமூகங்கள், மதகுருமார்கள், புத்திஜீவிகள், மாவீரர் குடும்பம் பெற்றார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்” என்றார்.

## கொரோனா தீவிரம்; இலங்கை அவதானம்



சூழ்நிலைகளை ஆராய்ந்து விசேட நிபுணர்கள் பரிந்துரைகளை முன்வைக்கும் பட்சத்தில், மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் மக்கள் தமது வழமையான சுகாதார நடைமுறைகளை தொடர்ச்சியாக பின்பற்ற வேண்டும் எனவும் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் சுட்டிக்காட்டியுள்ளார்.

விமான நிலையங்களில் தற்போது எந்தவொரு கொரோனா பரிசோதனை நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை என்று தெரிவித்த அவர், வெளிநாடுகளில் இருந்து நாட்டுக்கு வருகை தருவோர் தொடர்பில் பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை என்றும் அவதானமாக செயற்படுவது போதுமானது என்றார்.

விசேடமாக பண்டிகைக் காலத்தில் கொண்டாட்டங்களில் கலந்துகொள்ளுதல், களியாட்டங்களில் ஈடுபடுதல், ஒன்று கூடுதல், சுற்றுலா செல்தல் மற்றும் மாகாணங்களுக்கிடையிலான பயணங்களில் ஈடுபடல் உள்ளிட்ட செயற்பாடுகளின் போது மக்கள் தமது சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

## சஜித்துக்கு பொன்சேகா சாட்டையடி



பஸ்களை செலுத்துவதன் மூலமோ அல்லது பஸ்களுக்கு தீ வைப்பதன் மூலமோ ஒருவர் தலைவராக முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான விடயங்கள் நாட்டின் அரசியல் கலாசாரத்துடன் செல்வதாகவும் இந்த அரசியல் கலாசாரம் மாற்றப்பட வேண்டும் என்பதே தனது தனிப்பட்ட கருத்து என்றும் அவர் குறிப்பிட்டார்.

## ஜனவரி இறுதிக்குள் அமைச்சரவை மாற்றம்

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் ஆரம்ப கட்ட இணக்கப்பாட்டுடன் இந்த அமைச்சரவை மாற்றங்கள் மேற்கொள்ளப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

புதிதாக 12 அமைச்சரவை அமைச்சர்களை நியமிக்க முன்மொழியப்பட்டு உள்ளதுடன், பொதுஜன பெரமுனவால் முன்மொழியப்பட்டுள்ள சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு கூடுதல் அமைச்சு பதவிகளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக வஜிர அபேவர்தன, ஐக்கிய மக்கள் சக்தியின் மற்றுமொரு பாராளுமன்ற உறுப்பினருக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குவதற்கு உடன்பாடு ஏற்பட்டுள்ளதாக உள்ளகத் தகவல்கள் தெரி விக்கின்றன.

மேலும், முதற்கட்டமாக ஆறு ஆளுநர்களை நியமிக்க தீர்மானிக்கப்பட்டு உள்ளதுடன், மத்திய, மேல் மற்றும் சப்ரகமுவ மாகாண ஆளுநர்களை பெயரிட ஐக்கிய தேசிய கட்சிக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

தெற்கு, சப்ரகமுவ வடமேற்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு ஆளுநர் நியமிக்கும் பொறுப்பு பொதுஜன பெரமுனவுக்கு வழங்கவும் பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசிய கட்சிகளுக்கு இடையில் இணக்கம் ஏற்பட்டு உள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விளையாட்டு, நெடுஞ்சாலைகள், போக்குவரத்து, வனஜீவராசிகள் , சுகாதாரம், துறைமுகம், கைத்தொழில், மின்சாரம் மற்றும் சுற்றாடல் ஆகிய அமைச்சுகள் மாற்றப்பட இருப்பதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## கம்பி நீட்டினார் கஞ்சிப்பானை



இலங்கை பொலிஸாரால் தேடப்பட்டுவந்த இம்ரான், 2019ஆம் ஆண்டு டுபாயில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டிருந்தார்.

50 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் செல்ல அனுமதிக்கப்பட்ட அவர், பிணை நிபந்தனைகளை பூர்த்தி செய்ததையடுத்து, டிசெம்பர் 20ஆம் திகதி விடுவிக்கப்பட்டிருந்தார்.

பிணையில் விடுவிக்கப்பட்டதும், அவர் இந்தியாவுக்குள் நுழைய திட்டமிட்டுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்களில் தகவல்களின் அடிப்படையில் மத்திய புலனாய்வு மற்றும் அரச புலனாய்வுப் பிரிவினர் தகவல் வெளியிட்டிருந்தனர்.

மாறு வேடத்தில் அவர் தலைமன்னாருக்குச் சென்று அங்கிருந்து இந்தியாவுக்குள் ஊடுருவுவதற்கான ஏற்பாடுகளை அவரது சகாக்கள் செய்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானை தளமாகக் கொண்ட ஹெரோய்ன் மற்றும் கொகேய்ன் வியாபாரிகளுடன் இம்ரான் வலுவான தொடர்பு கொண்டுள்ளதாகவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## நீர்க் கட்டண அதிகரிப்பு நிச்சமாக இடம்பெறும்

### அமைச்சரவைக்கு வருகிறது மின் கட்டண யோசனை



குடிநீர் விநியோகத்துக்காக அதிகளவு மின்சாரம் செலவிடப்படுவதால், மின் கட்டண அதிகரிப்பின் காரணமாக நீர் கட்டணமும் நிச்சயமாக அதிகரிக்கும் என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குடிநீர் விநியோகத்தில் நீரைச் செலுத்தும் பணிக்கு அதிக அளவு மின்சாரம் தேவைப்படுவதால், மின் கட்டணத்தை உயர்த்தினால், அதற்கேற்ப குடிநீர் கட்டண உயர்வை தடுக்க முடியாது என்று அவர் குறிப்பிட்டார்.



## ஜனாதிபதி மாளிகையில் 39 ஓவியங்கள் மாயம்

தொல்பொருள் திணைக்களத்தின் பல குழுக்கள் மேற்கொண்ட தொடர் விசாரணைகளின் போதே இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

ஜூலை மாதம் ஜனாதிபதி மாளிகையை போராட்டக்காரர்கள் முற்றுகையிட்ட பின்னர் காணாமல் போன கலாசார மற்றும் வரலாற்று பொருட்களை அடையாளம் காண தொல்பொருள் திணைக்களம் விசாரணை முன்னெடுத்து வருகிறது.

அந்த வகையில், கடந்த ஜூலை மாதம் 9ஆம் திகதி ஜனாதிபதி மாளிகைக்குள் பிரவேசித்த சிலரின் செயற்பாடுகளால் அங்குள்ள ஓவியங்கள் மற்றும் சித்திரங்கள் அதிகளவில் சேதமடைந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி மாளிகையில் உள்ள 209 ஓவியங்களை பாதுகாப்பதற்காக தொல்பொருள் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன்னர் ஓவியங்கள் மற்றும் அதன் நிலையை அதிகாரிகள் ஆய்வு செய்ய உள்ளதாக திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அரச ஊழியர்களுக்கு விசேட முற்பணம்



இது தொடர்பான சுற்றறிக்கை. பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எம். பி. கே. மாயாதுன்னவினால், டிசெம்பர் 30ஆம் திகதியன்று வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சேவையின் தேவைகருதி தக்கவைக்க அனுமதி



அவர்களின் கோரிக்கைக்கு அமைய சில ஊழியர்களை ஒப்பந்த அடிப்படையில் தக்கவைத்துக் கொள்ள பொது முகாமையாளருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## வார இறுதி நீண்டதொரு விடுமுறையை கொண்டது 2023

ஜனவரி 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை துருத்து போயா மற்றும் ஏப்ரல் 7 ஆம் திகதி புனித வெள்ளி என்ற அடிப்படையில், 2023 ஜனவரி மாதம் முதல் வருடத்தில் ஒன்பது நீண்ட வார இறுதி நாள்கள் இருக்கின்றன.

தமிழ்-சிங்களப் புத்தாண்டு வியாழன் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் வந்துள்ளதுடன், அந்த வாரத்தில் ஏனைய இரண்டுநாள்களும் விடுமுறை நாள்களாகும்.

மே தினம் ஒரு திங்கட்கிழமையும், வெசாக் போயா விடுமுறை மே 5 வெள்ளிக்கிழமையும் வருகின்றன.

செப்டம்பர் 28, 29 ஆகிய திகதிகளில் நபிகள் நாயகத்தின் பிறந்த நாளுடன் நான்கு நாள்கள் வார இறுதி நாள்களாக உள்ளன. கிறிஸ்மஸ் டிசெம்பர் 25 திங்கட்கிழமையும், உந்துவப் போயா டிசெம்பர் 26 செவ்வாய்கிழமையும் இருப்பதால் டிசெம்பரில் மற்றொரு நான்கு நாள் வார இறுதி நாள்கள் வருகின்றன.

## விளையாட்டு மைதானத்துக்கு முன்னாள் தவிசாளரின் பெயரை சூட்ட எதிர்ப்பு

ஆர். ஜெயஸ்ரீராம்

கோறளைப்பற்று பிரதேச சபையின் பொது விளையாட்டு மைதானத்துக்கு முன்னாள் தவிசாளர் கனகரெத்தினம் பெயர் பொறிக்கப்பட்ட பெயர் பலகை இடுவதற்கு தவிசாளர் திருமதி சோபா ஜெயரஞ்சித் ஞாயிற்றுக் கிழமை (01) நடவடிக்கையை முன்னெடுத்திருந்தார்.

அந்த நடவடிக்கைக்கு சகோதார இனத்தவர்கள் விடுத்த கடும் எதிர்ப்பை தொடர்ந்து குறித்த நடவடிக்கை கைவிடப்பட்டு மற்றுமொரு தினத்தில் இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த மைதானத்துக்கு தனி நபர்களது பெயர் எதுவும் வைக்காமல் முன்பு இருந்தமை போல் பொது விளையாட்டு மைதானம் என பெயர் வைக்கும்படி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவர்கள் கேட்டுக் கொண்டனர்.

மைதானத்துக்கு முன்னாள் தவிசாளர் கனகரெத்தினம் பெயர் சூட்டப்படபோவதாக கேள்வியுற்றவர்கள் மைதானத்துக்கு முன்பாக ஒன்று கூடி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் தவிசாளருடன் வாக்குவாதத்திலும் ஈடுபட்டனர்.

பின்னர் சம்பவ இடத்திற்கு வாழைச்சேனை பொலிஸார் வரவழைக்கப்பட்டனர். மேற்படி விவகாரம் தொடர்பில் இரு தரப்பினரின் கருத்துகளையும் பொலிஸார் கேட்டறிந்து கொண்டனர். அதன்பின்னர் குறித்த செயற்பாட்டினை நிறுத்தியதுடன் நீதிமன்ற நடவடிக்கையின் பின்னர் பெயர் பலகை இடும் செயற்பாட்டினை மேற்கொள்ளுமாறு தவிசாளருக்கு ஆலோசனையும் பொலிஸார் வழங்கினர்.

குறித்த விளையாட்டு மைதானம் புதுக்குடியிருப்பு கிராமசேகர் பிரிவுக்குள் வருவதாகவும் பிரதேச சபையில் முன்னாள் தவிசாளரின் பெயர் மைதானத்துக்கு வைக்கப்படவேண்டும் என சபை தீர்மானம் எடுக்கப்பட்டதனால் அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தவிசாளர் திருமதி சோபா ஜெயரஞ்சித் தெரிவித்தார்.

இருந்தபோதிலும் சட்ட நடவடிக்கையின் பின்னர் மீண்டும் அதே இடத்தில் குறித்த தவிசாளரின் பெயர் பொறிக்கப்பட்ட பெயர் பலகை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் கருத்து தெரிவித்தார்.

# குருசெத்த கடனுக்கான வட்டிவீதம் அதிகரிப்பு

## இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டனம்

ரா.கமல்

அதிபர்-ஆசிரியர்கள் மற்றும் குருசெத்த கடனுக்கான கடன் மற்றும் வட்டி தவணைகளை செலுத்தும் போது 9.5 சதவீதமாக இருந்த வட்டியை 15.5 5 சதவீதம் வரை அதிகரிக்க எடுத்த தீர்மானத்துக்கு இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளதாக சங்கத்தின் தேசிய அமைப்பாளர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

அதிபர் ஆசிரியர்கள் பல பிரச்சனைகளை எதிர்கொண்டுள்ளனர். இச்சந்தர்ப்பத்தில் , அரச வங்கிகள் மூலம் குருசெத்த கடன் திட்டத்தின் கீழ் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் பெற்றுள்ள குருசெத்த கடனுக்கான வட்டியை அதிகரிக்க வங்கிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

அரசாங்கத்தினால் முன்மொழிக்கப்பட்ட வரவு- செலவு திட்டத்தில் அதிபர் ஆசிரியர்களுக்கு எவ்விதமான சம்பளம் அல்லது கொடுப்பனவுகள் எதுவும் அதிகரிக்கப்படவில்லை எனினும். அரசாங்க ஊழியர்களின் இவ்வருட வரவு- செலவுத் திட்டத்தின் படி கடனுக்கான வட்டியை உயர்த்துவது பாரிய அநீதியாகும் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதான செயலாளர் மஹிந்த ஜயசிங்க, ஜனாதிபதியும் நிதி அமைச்சரும் ஆகிய ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

மேலும் அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களாக கடன் பெறும் போது அதி கூடிய அறவீடு செய்யக்கூடிய தொகைக்கே கடன் வழங்கப்படும் எனினும் தற்போது வட்டி அதிகரிப்பினால் மாதாந்தம் அறவீடு செய்யப்படும் கடனுக்கான அறவீடு தொகை அதிகரிப்பினால் கடனாளியின் மாதாந்தம் அறவீடு செய்யக்கூடிய தொகைக்கும் பார்க்க அது கூடிய தொகை அறவீடு செய்யப்படுவதனால் சம்பளத்தில் அதிகபட்ச அறவீடு செய்யும் நிபந்தனையை மீறும் செயலாக இது காணப்படுகின்றது என குறிப்பிடப்பட்டுள்ளது.

நிதி அமைச்சு, மத்திய வங்கி மற்றும் அரசியல் அதிகாரங்கள் உடைய பொது நிதி முகாமைத்துவத்திற்கு பொறுப்பான நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகள் நிதி முறைகேடுகளினால் ஏற்பட்டுள்ள பிரச்சனைகளை அரச ஊழியர்கள் மற்றும் மக்கள் தோள்களில் சுமத்தி செல்லும் அரசாங்கத்தின் தன்னிச்சையான முடிவுகளை தொழிற்சங்கம் கடுமையாக எதிர்க்கிறது. இந்த அரசாங்கம் அதிபர், ஆசிரியர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு பதிலாக கஷ்டங்களை வழங்குவதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க நேரிடும் என சங்கத்தின் தேசிய அமைப்பாளர் சுந்தரலிங்கம் பிரதீப் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## ஜன.21 முதல் பெப்.19 வரை பாடசாலைகளுக்கு விடுமுறை

2022ஆம் ஆண்டுக்கான மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் தொடர்பில் கல்வி அமைச்சு அறிவிப்பொன்றை விடுத்துள்ளது.

இதற்கமைய நாடளாவிய ரீதியிலுள்ள சகல பாடசாலைகளிலும் திங்கட்கிழமை (02) முதல் 2022ஆம் ஆண்டுக்கான மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகும்.

நத்தார் பண்டிகையை முன்னிட்டு கடந்த டிசெம்பர் 23ஆம் திகதி முதல் நேற்று (01.01.2023) வரையிலும் சகல பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டிருந்தது.

இதேவேளை, உயர்தரப் பரீட்சை நடைபெறவிருப்பதால், ஜனவரி 21 ஆம் திகதி முதல் பெப்ரவரி 19ஆம் திகதி வரை பாடசாலைகளுக்கு மீண்டும் விடுமுறை வழங்கப்படவுள்ளது.

2022 ஆம் ஆண்டுக்கான மூன்றாம் தவணைக்கான இறுதி தவணை பெப்ரவரி 20 ஆம் திகதி முதல் மார்ச் 24 ஆம் திகதி வரை நடைபெறும்.

அதற்கமைய 2022ஆம் ஆண்டுக்கான இறுதி தவணை கல்வி நடவடிக்கைகள் 2023 மார்ச் 24ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## மாதாந்த சம்பளத்துக்கு தனிநபர் வருமான வரி விதிப்பு அமுல்

நிதியமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால், பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட வரித் திருத்தங்கள் உட்பட பல தீர்மானங்கள் 2023 ஜனவரி 1ஆம் திகதி முதல் அமுலுக்கு வருகின்றன. அதற்கமைய, மாதாந்த சம்பளத்துக்கு தனிநபர் வருமான வரி விதிக்கப்படும்.

மாதாந்த சம்பளம் 150,000 ரூபாயாக இருந்தால் மாதாந்த வரியாக 3,500 ரூபாய் அறவிடப்படும். மாதச் சம்பளம் 02 இலட்சம் ரூபாய் என்றால், மாத வரித் தொகை 10,500ரூபாயாகும். 250,000 ரூபாயை மாதாந்த சம்பளம் பெறும் நபர் 21,000 ரூபாவையும், 300,000 ரூபாயை சம்பளம் பெறுபவர் 35,000 ரூபாவையும் வரியாக செலுத்த வேண்டும்.

ரூபாய் 350,000 தை மாத சம்பளம் பெறுபவர் 52,500 ரூபாயையும், 04 இலட்சம் ரூபாய் சம்பளம் பெறுபவர் 70,500 ரூபாயையும், 05 இலட்சம் ரூபாய் சம்பளம் பெறுபவர் 106,500 ரூபாயையும் வரியாக செலுத்த வேண்டும்.

மேலும், 750,000 ரூபாய் சம்பளம் பெறுபவர் மாதாந்தம் 196,500 ரூபாயை வரியாக செலுத்த வேண்டும், பத்து இலட்சம் ரூபாய் சம்பளம் பெறுபவரிடம் இருந்து பெறப்படும் வரித் தொகை 286,500 ரூபாவாகும்.

எவ்வாறாயினும், அமுலுக்கு வரும் தனிநபர் வருமான வரியானது மாதாந்தம் ஒரு லட்சம் ரூபாய் வரை சம்பளம் பெறுபவர்களிடமிருந்த அறவிடப்படாது எனவும் நிதியமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## 215 திட்டங்களில் 175 திட்டங்கள் கிட்டத்தட்ட முடிந்துள்ளன

திறைசேரி ஒதுக்கீட்டின் கீழ் 10,600 மில்லியன் ரூபாயில், இந்த ஆண்டில் செயல்படுத்தப்பட்ட 215 திட்டங்களில் கிட்டத்தட்ட 175 திட்டங்கள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன என்று நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதன்படி மேலும் 40 திட்டங்களின் பணிகள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த வருடம் நாடு முகம்கொடுத்துள்ள பொருளாதார சூழல் காரணமாக அந்தத் திட்டங்களை முடிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஆனால், அந்த 40 திட்டங்களின் பணிகளை அடுத்த ஆண்டுக்குள் முடிக்க விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிடமிருந்து ஏற்கெனவே இதற்கான அறிவுறுத்தல்கள் கிடைத்துள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நூறு நகரங்கள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நாட்டின் அனைத்துப் பகுதிகளும் 117 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நகர்ப்புற மையங்களை உள்ளடக்கியதுடன் அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட 116 நகரங்களில் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. 110 நகரங்களின் பணிகள் தற்போது முழுமையாக முடிவடைந்துள்ளதாக நகர அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

பணிகள் நிறைவடைந்த 110 நகரங்களில் நடைபாதைகள், நகர்ப்புற திறந்தவெளி நிலத்தில் வடிகால் அமைப்புகள், பயணிகள் தங்குமிடங்கள் மற்றும் சுகாதார வசதிகள் போன்றவை அடிப்படை தேவைகள் பொது மக்களுக்காக உருவாக்தெரிவித்துள்ளது.

ஒன்பது மாகாணங்களில் உள்ள திட்டங்களுக்கு திறைசேரியால் ஒதுக்கப்பட்ட பணத்தைப் பயன்படுத்தி பேருந்து நிலையம், மக்கள் கண்காட்சி, பொதுச் சந்தை ஆகியன இவ்வருடம் நடைமுறைப்படுத்துவதற்காக 44 திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அதில், 29 திட்டங்களின் பணிகள் நிறைவடைந்துள்ளதாக, நகர அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

மேலும் அரச நிறுவனங்களுக்கு திறைசேரி ஒதுக்கீட்டின் கீழ் வழங்கிய ஒதுக்கப்பட்ட பணத்தைப் பயன்படுத்தி 22 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, இதன் கீழ் 5 திட்டங்கள் நிறைவடைந்துள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. மற்றும் நாடு முகம் கொடுத்துள்ள நிதி நெருக்கடியால், 13 திட்டங்களின் பணிகள் மெதுவாக நடந்து வருகின்றன.

பேர வாவியைச் சுற்றி நடைபாதை மற்றும் பொது வசதிகள் அபிவிருத்தித் திட்டத்தின் அத்தியாவசியப் பணிகள் மட்டுமே முடிக்கப்பட்டுள்ளன.

மேலும் அரசியல் தலைமை மற்றும் மக்களின் வேண்டுகோளின் பேரில் ரூ 2,452 மில்லியன் செலவில் நிர்மாணங்களை ஆரம்பித்த யாழ்ப்பாண நகர மண்டபம் நிர்மாண வேலைத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு யாழ்.மாநகர சபை வழங்க வேண்டும். அதன் கட்டுமான பணிக்காக ரூ 1,200 மில்லியன் செலவிடப்பட்டு பணிகள் நிறைவடைந்துள்ளன. முழுவதுமாக நிறைவு செய்வதற்கு 2620 மில்லியன் ரூபா தேவைப்படுவதாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதற்கு மேலதிகமாக, நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதியிலிருந்து 8,000 மில்லியன் ரூபாவைப் பயன்படுத்தி செத்சிறிபாய மூன்றாவது கட்டம் உட்பட 7 வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.





## புத்தாண்டு வரவேற்பு...

நாட்டின் பல பாகங்களில் இருந்தும் கொழும்பு–காலி முகத்திடலுக்கு வருகைதந்த ஆயிரக்கணக்கான மக்கள் 2022 டிசெம்பர் 31ஆம் திகதி நள்ளிரவு வரையிலும் குழுமியிருந்து. அங்கு இடம்பெற்ற விளையாட்டு நிகழ்ச்சிகளையும் பங்கேற்று, இசைக்கச்சேரிகளிலும் கலந்துகொண்டனர். 2023 ஆம் ஆண்டு புத்தாண்டையும் வரவேற்றனர். (படங்கள்: சமூக வலைத்தளங்கள்)

## கதிர்காமம், வாதுவை விபத்துகளில் 25 பேர் காயம்

புத்தாண்டின் முதல் நாளான முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் 2022ஆம் ஆண்டி இறுதி நாளான டிசெம்பர் 31ஆம் திகதியும், கதிர்காமம் மற்றும் வாதுவை ஆகிய இரண்டு இடங்களில் இடம்பெற்ற இருவேறு விபத்துக்களில் 25 பேர் காயமடைந்துள்ளனர்.

தென் அதிவேக நெடுஞ்சாலையில், 88 ஆவது கிலோ மீற்றருக்கு அருகில் சொகுசு பஸ்ஸொன்று வீதியை விட்டு விலகி நேற்று (01) காலை விபத்துக்குள்ளாகியதில் 18 பயணிகள் காயமடைந்தனர். அதில், 11 ஆண்களும் 4 பெண்களும் மூன்று குழந்தைகளும் அடங்குகின்றனர்.

அவர்கள் அனைவரும், காலி, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்த பொலிஸார், அவர்கள், மத்துகம, பெலவத்த பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர்.

வாதுவையில்-பிரேத ஊர்வலத்தில் சென்றவர்கள் மீது முச்சக்கரவண்டி மோதியதில் 3 சிறுவர்கள் உட்பட 7 பேர் படுகாயமடைந்துள்ளனர். டிசெம்பர் 31ஆம் திகதி மாலை வேளையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த பெண்ணொருவரின் சடலம் வாதுவையில் உள்ள மயானம் ஒன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்ட நிலையில், பிரேத ஊர்வலத்தின் பின்னால் சென்றுகொண்டிருந்தவர்களை வேகமாக வந்த முச்சக்கரவண்டி மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் பாணந்துறை மற்றும் களுத்துறை வைத்தியசாலைகளுக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

### எம் ஜி ஆர் நினைவுதின உரையில்

## முதல்வர் மு.க ஸ்டாலினுக்கு குமரகுருபரன் பாராட்டு

மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் எம் ஜி ஆர் இலங்கைத்தமிழர் மீதும் போராட்டம் மீதும் காட்டிய அபிமானம் , அன்பு ஆர்வம் அளப்பெரியது ,தற்துணிவோடு தனித்துவமாக செய்தப்பணி வரலாற்றில் மறக்க முடியாதது என ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித்தலைவர் கலாநிதி நல்லையா குமரகுருபரன் தெரிவித்தார்.


கொழும்பு பழைய நகர மண்டபத்தில் இலங்கை அ.தி. மு.க கலாபூஷணம் ஏற்பாடு செய்த 35 ஆவது நினைவுதின கூட்டத்தில் விசேட விருந்தினராக கலந்து கொண்டுபேசுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இந்நிகழ்வு, ஈஸ்வரலிங்கம் தலைமையில் சனிக்கிழமை (31) இடம்பெற்ற நினைவுரையில் பேசிய முனைவர் குமரகுருபரன் .

அந்தவகையில் இன்றைய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் இப்பொழுது அறிவித்த தமிழக மக்களுக்கான ஆதார் காட்டுக்கு ஆயிரம் ரூபாய் அகதிகளாக அங்குவாழும் நம் தமிழருக்கும் வழங்க உத்தரவிட்டு சகோதரத்துவத்தை, தொப்புள் கொடி உறவை வெளிப்படுத்தியமை பாராட்டுக்குரியது .அதற்கு நாம் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம் என்றார்.

## மனிதாபிமான உதவி தேவை



கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்துக்கு, நத்தார் ஆராதனைக்காக சென்றிருந்த போது, தேவாலயத்துக்கு முன்பாக வீதிஓரத்தில் உட்கார்ந்து இருந்த தமிழ் இளைஞன், எனக்குள் பரிதாபத்தையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியிருந்தார்.

சகமனிதன் துன்பப்படும் போது, ஓடிச்சென்று அவனுக்கு கைகொடுத்து உதவுவதே, மனிதநேயமும் மனிதப்பண்பாடும் ஆகும். அந்தவகையில், மனிதாபிமானத்துடன் அந்த இளைஞனுக்கு உணவும் சிறுதொகைப் பணமும் அளித்து உதவ என்னால் முடிந்தது.

உலக மானிடக் குடும்பத்தில் ஓர் அங்கத்தவனாக இருக்கும் இந்த இளைஞனுக்கு என்னால் வழங்கப்பட்ட இந்தச் சிறுஉதவி, அவனது துன்பங்களைத் தீர்க்கப் போதப்போவதில்லை. எனவே, இந்த இளைஞனின் துன்பத்துக்கு நிரந்தரமாகத் தீர்வுகாணப்பட வேண்டும். அதற்கு, அரசாங்க மட்டத்திலேயே, ஒத்துழைப்புகளும் தீர்வுகளும் வழங்கப்பட வேண்டும்.







## சிரார்த்த தினம்

மலையக மக்கள் முன்னணியின் முன்னாள் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பி. சந்திரசேகரனின் 13ஆவது சிரார்த்த தினம் ஹட்டனிலுள்ள கட்சியின் தலைமையகத்தில் மலையக மக்கள் முன்னணி மற்றும் மலையக தொழிலாளர் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஸ்ணன் தலைமையில் நேற்று (1) அனுஷ்டிக்கப்பட்டது. (எஸ்.கணேசன்)

முல்லைத்தீவில் தமிழ் கிராமத்தை

# முஸ்லிம் வட்டாரத்துடன் இணைத்தமைக்கு எதிர்ப்பு

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் எல்லை நிர்ணயகுழுவால் வட்டாரங்கள் குறைப்பு செய்யப்பட்ட போதும், முழுமையான சிங்கள மக்களை கொண்ட வெலிஓயா பிரதேசத்தில் எந்த மாற்றமும் செய்யாமல் தமிழ், முஸ்லிம் மக்கள் வாழும் கிராமங்களில் மாற்றங்களைச் செய்துள்ளதாக கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் த. அமலன் தெரிவித்துள்ளார்.

தமிழ்மக்கள் அதிகம் வாழும் குமாரபுரம் கிராமத்தை கணுக்கேணி வட்டாரத்துடன் இணைக்குமாறு கோரி, முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க. விமலநாதனிடமும், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ். குணபாலனிடமும் கரைதுறைப்பற்று பிரதேச



செயலாளரிடமும் பொது அமைப்புகள், பிரதேச சபை உறுப்பினர் ஆகியோர் சென்று மனுவைக் கையளித்துள்ளார்கள். இதன்பின்னர் கருத்து தெரிவித்த போதே, மேற்படி தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:

13 வட்டாரங்களைக் கொண்ட கரைதுறைப்பற்று பிரதேச சபை, எல்லை நிர்ணய குழுவால் 10 வட்டாரங்களாகக் குறைப்பு செய்யப்பட்டுள்ளது.

கரைதுறைப்பற்று பிரதேசத்திற்கு உட்பட்ட கணுக்கேணி வட்டாரத்தில், குமாரபுரம் கிராமம் உள்வாங்கப்பட்டிருந்தது. குமாரபுரம் கிராமத்தில் 80 முஸ்லிம் குடும்பங்களும், 333 தமிழ்க் குடும்பங்களும் வாழ்கின்றார்கள். இந்தக் குமாரபுரம் கிராமத்தை தற்போது ஹிச்சிராபுரம் வட்டாரம் எனப் புதிதாக உருவாக்கப்பட்ட முஸ்லிம் தமிழ்மக்கள் செறிந்து வாழும் வட்டாரத்துடன் இணைத்துள்ளார்கள். இதை குமாரபுரம் கிராம மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

கூகிள் வரைபடத்தில், எமது கிராம் 'குமாரபுரம் முஸ்லிம் கொலனி' என்று பெயர் காணப்படுகின்றது. தரைத்தோற்ற அமைப்பை வரைபடங்கள் ஊடாகப் பார்த்தே, இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார்கள். எல்லை நிர்ணய அமைப்பு, எல்லைகளை நிர்ணயம் செய்யும் போது, கிராம மட்ட அமைப்புகளை அழைத்து பேசியிருக்க வேண்டும் என்றும் பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்துள்ளார்.




## புதுவருடத்தில் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் போராட்டம்

■ க. அகரன்

புதுவருடதினத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், வவுனியாவில் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட மற்றும் வெள்ளை வானில் கடத்தப்பட்ட தமது பிள்ளைகளுக்கு நீதி தேவை என்பதோடு, அவர்களை விடுவிக்க வேண்டும் எனவும் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், இறையாண்மையுடனான தீர்வே பாதிக்கப்பட்டோருக்கு தேவை என தெரிவித்து மாதிரி வாக்களிப்பையும் மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் பிள்ளைகளின் தாய்மார்கள் உட்பட பாதிக்கப்பட்ட தமிழ் மக்களால் முன்வைக்கப்பட்ட தீர்வை மட்டும் தான் தமிழர்கள் ஏற்றுக் கொள்வார்கள்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முன்வைக்கும் தீர்வை, எந்தத் தமிழர்களும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

தெற்கு சூடான், எரித்திரியா, கொசோவா, கிழக்கு திமோர் ஆகிய நாடுகளில் கடந்த காலங்களில் நடந்த ஐ.நாவின் கண்காணிப்பு வாக்கெடுப்பே, அரசியல் தீர்வுக்கான சிறந்த வழியாகும்.

ஐ.நா கண்காணிக்கும் வாக்கெடுப்பை நடத்துவதற்கு, எங்களிடம் மூன்று சாத்தியமான அரசியல் தீர்வுகள் உள்ளன: 1. தமிழர் இறையாண்மை, 2. மேற்கத்திய பாணி ஜனநாயகம், 3. ரணில்-சம்பந்தன் ஒப்பந்தத்தில் இருந்து தீர்வு.

புலம்பெயர் தமிழ் மக்கள், எமது தமிழ் இறையாண்மை மிக்க தேசத்தில் முதலீடு செய்து, அபிவிருத்தி செய்ய ஆவலுடன் காத்திருக்கின்றமையால், அரசியல் தீர்வு விடயத்தில் எமது நேரத்தை வீணடிக்க நாம் விரும்பவில்லை என்றனர்.

யோகர் வாசுமிகள் முதியோர் இல்லத்துக்கு

## புத்தாடைகள் அன்பளிப்பு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, வன்னேரிக்குளத்தில் அமைந்துள்ள யோகர் சுவாமிகள் முதியோர் இல்லத்தில் உள்ளவர்களுக்கு, புத்தாண்டை முன்னிட்டு புத்தாடைகள், நேற்று முன்தினம் (31) அன்பளிப்பு செய்யப்பட்டன.

யாழ். ஊடக



அமையத்தின் ஏற்பாட்டில், புலம்பெயர் உறவான பிரகாஷ் குடும்பத்தினரின் நிதிப் பங்களிப்பில், குறித்த புத்தாடைகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



போதைவஸ்துக்கு அடிமையான

## மகனை பொலிஸில் ஒப்படைத்த தாய்

■ கெ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வலைஞர்மடம் கிராமத்தில், போதைக்கு அடிமையான 24 அகவையுடைய மகனை, தாயார் பொலிஸில் ஒப்படைத்த சம்பவம் பதிவாகியுள்ளது.

தந்தை இல்லாத நிலையில், தாயார் வருந்தி உழைத்து, மகனைப் பராமரித்து வந்துள்ளார். ஊசி, குடு உள்ளிட்ட போதைப்பொருட்களுக்கு அடிமையான குறித்த இளைஞன், வீட்டில் இருந்த பொருட்களை விற்பனை செய்து போதைவஸ்து பயன்படுத்தி வந்துள்ள நிலையில், தாயின் மோதிரத்தை விற்கத் தருமாறு வற்புறுத்திய வேளை, மகனின் தொல்லை தாங்கமுடியாத தாயார், முல்லைத்தீவு பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

தாயின் முறைப்பாட்டுக்கு அமைய, பொலிஸாரால் குறித்த இளைஞன் மீட்கப்பட்டு, முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் வெள்ளிக்கிழமை (30) முன்னிலைபடுத்தப்பட்டதை அடுத்து, இளைஞன் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

மருத்துவ பரிசோதனைகளில் போதைவஸ்து பாவனை உறுதிப்படுத்தப்பட்டது. இந்நிலையில், கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில், ஆறு மாத காலத்துக்கு இளைஞனை புனர்வாழ்வுக்கு உட்படுத்துமாறு மன்று பணித்துள்ளது.

நாம்பன்குளத்தில்

## கிரவல் அகழ்வுக்கு எதிராக மக்கள் போராட்டம்

■ க. அகரன்

வவுனியா, நாம்பன்குளத்தில் தொடர்ச்சியாக கிரவல் அகழப்படுவதால், கிராம மக்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

'எமது கிராம வளத்தை சூறையாடாதே', ' பிரதேச செயலாளரே மக்களின் வாழ்வை சீரழிக்காதே' என எழுதப்பட்ட பதாகைகளையும் தாங்கியிருந்தனர். கிரவல் அகழும் பகுதிக்கு சென்ற கிராமத்தவர்கள், கிரவல் அகழப்பட்ட இடங்களையும் ஊடகங்களுக்கு சுட்டிக்காட்டியிருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த கிராமமக்கள், "பிரதேச செயலாளரிடம் நாங்கள் சென்றால், எங்கள் சார்பாக



அவர் எதையும் கதைப்பதில்லை. தனக்கு மேலிடத்தில் இருந்து அழுத்தம் வருகின்றது; அதனால் தான் எதையும் செய்ய முடியாது என்கின்றார். இதற்கு முழுக் காரணம், பிரதேச செயலாளரும் மாவட்ட செயலக அதிகாரிகளுமேயாகும். இலஞ்சம் வேண்டியே செய்கின்றனர். நாங்கள் சென்றால் நிறுத்துவதாகத் தெரிவிக்கும் பிரதேச செயலாளர், மறுநாள் கிரவல் வெட்டுவதற்கு அனுமதி கொடுக்கின்றார். அரசியல்வாதிகளும் இந்நிலைக்கு காரணம். மலசலகூடமெல்லாம் நீர் நிரம்புகின்றன. கிணறுகள் நீர் கூடாமல் போகின்றன. கிரவல் கிடங்கில் நீர் நிரம்பி நிற்பதால் சிறு பிள்ளைகளை வீட்டில் வைத்திருக்க பயமாக உள்ளது" எனவும் தெரிவித்தார்கள்.

# சாய்ந்தமருதின் வட்டாரங்களை குறைப்பதை ஏற்கமுடியாது

■ நூருல் ஹுதா உமர்

புதிதாக அமைக்கப்பட்டுள்ள தேர்தல் எல்லைகள் நிர்ணய ஆணைக்குழுவின் சிபாரிசின் அடிப்படையில், கல்முனை மாநகர சபைக்குட்பட்ட சாய்ந்தமருது பிரதேசத்தில் உள்ள வட்டாரங்களின் எண்ணிக்கையை ஆறிலிருந்து நான்காக குறைத்துள்ளமையை ஏற்க முடியாது என கல்முனை மாநகர முன்னாள் மேயர் கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தெரிவித்துள்ளார்.

பிரதமரும், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சருமான தினேஷ் குணவர்தனவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார். அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

அதிக வாக்காளர்களைக் கொண்ட சாய்ந்தமருத்துக்கு 04 வட்டாரங்கள் என்பது ஏற்றுக்கொள்ள முடியாது. 06 வட்டாரங்கள் தொடர்ந்தும் இருக்க வேண்டும். பொலிவேரியன் கிராமத்தை தனியான வட்டாரமாக பிரிக்கவேண்டிய தேவை உள்ள காலகட்டத்தில், இப்படி வட்டாரங்களை சுருங்குவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

கல்முனையில் 05 வட்டாரங்களும், இஸ்லாமாபாத்தை தனி வட்டரமாகவும் நிர்ணயித்துள்ளமை போன்று, சாய்ந்தமருத்துக்கான வட்டாரங்களும் 06ஆக இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



## 'மகருகிராமம் தகவல் மஞ்சரி' நூல் வெளியீடு

■ ஒலுமுதீன் கியாஸ்

'மகருகிராமம் தகவல் மஞ்சரி' என்ற நூலின் வெளியீட்டு வைபவம் நேற்று முன்தினம் (31) நடைபெற்றது.


கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட, கிராம சேவகர் பிரிவான மகரு கிராமத்தின் பல்வேறு தகவல்களை உள்ளடக்கியுள்ள இந்நூலை, இந்தப் பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தர் ஏ.எம் அஸ்லம் தொகுத்துள்ளார். கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம் கனி நூலை வெளியிட்டு வைத்தார்.

## கிழக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர்

■ வி.ரி சகாதேவராஜா

கல்முனை வலய கல்வி பணிப்பாளராக இருந்த செல்லத்துரை புவனேந்திரன், கிழக்கு மாகாணத்தின் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம்1 அதிகாரியான இவர், காரைதீவைச் சேர்ந்தவராவார். காரைதீவு



விபுலாநந்த மத்திய கல்லூரியில், 2009.09.09இல் ஆசிரிய நியமனம்பெற்றதுடன் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் முதலாம் வகுப்புக்கு 2021.03.23 முதல் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இவர் நாளை மறுதினம் (04) திருகோணமலை கிழக்கு மாகாண கல்வி திணைக்களத்தில் கடமையை பொறுப்பேற்கவிருக்கிறார்.



படுகொலை செய்யப்பட்ட

## ஊடகவியலாளர் தேவராஜாவின் 37 ஆவது நினைவேந்தல்

■ கனகராசா சரவணன்

படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் கணபதிப்பிள்ளை தேவராஜாவின் 37ஆவது நினைவேந்தல் நிகழ்வு, அம்பாறை, ஆலயடிவேம்பு இந்து மாமன்ற மண்டபத்தில் நேற்று முன்தினம் (31) அம்பாறை தமிழ் ஊடகவியாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

அம்பாறை தமிழ் ஊடகவியாளர் ஒன்றியத்தின் தலைவர் க.சரவணன் தலைமையில் நடைபெற்ற இந்த நினைவேந்தலில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், ஊடகவியலாளர் தேவராஜாவின் சகோதரர் அக்கரைப்பாக்கியன் உள்ளிட்ட குடும்ப உறவுகள், ஊடகவியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அக்கரைப்பற்று பிராந்திய செய்தியாளராக கடமையாற்றிய கணவதிப்பிள்ளை தேவராஜா, 1985ஆம் ஆண்டு டிசெம்பர் 25ஆம் திகதி இராணுவ சுற்றி வளைப்பில் கைது செய்யப்பட்டு, கொண்டை வெட்டுவான் இராணுவ முகாமில் வைத்து படுகொலை செய்யப்பட்டார்.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின்

## மேலதிக செயலாளருக்கு கௌரவம்

■ அபு அலா

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளராக கடமையாற்றிய வி. திவாகர சர்மா, தனது அரச சேவையிலிருந்து நேற்று முன்தினம் (31) ஓய்வுபெற்றதை அடுத்து, அவரின் சேவைகளை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே முரளிதரன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கௌரவிப்பு நிகழ்வில், அமைச்சின் கணக்காளர் எஸ்.



சட்குணேஸ்வரன், திட்டமிடல் பணிப்பாளர் ஆர். நெடுஞ்செழியன், நிர்வாக உத்தியோகத்தர் எஸ். ஸ்ரீவாணி, பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் திருமதி எஸ். விஜயகுமார் மற்றும் அமைச்சின் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு அவரின் சேவைகளைப் பாராட்டி கௌரவித்தனர்.

இனப்பிரச்சினைக்கான தீர்வில்

## முஸ்லிம் சமூகத்தின் வகிபாகம்

■ நூருல் ஹுதா உமர்

சமூக நடவடிக்கைகள், துறைசார் அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிக்கான மையம் ஏற்பாடு செய்த 'இனப்பிரச்சினைக்கான தீர்வில் முஸ்லிம் சமூகத்தின் வகிபாகம்' தொடர்பிலான கலந்துரையாடல் மையத்தின் தலைவர் எம்.ஜே.எம் அன்வர் நௌசாத் தலைமையில் அட்டாளைச்சேனை லொயிட்ஸ் மண்டபத்தில் நேற்று (01) நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் தென்கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்தின் அரசியல் விஞ்ஞான துறைத்தலைவர் பேராசிரியர் எம்.ஏ.எம் பௌசர், கொழும்பு பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் எம்.ஐ சதாத் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இனமுரண்பாடுகளில் முஸ்லிம் தலைவர்கள் நடந்து கொண்ட விதங்கள், முஸ்லிம் சமூகம் தவறவிட்ட தீர்வுகள், முஸ்லிம் அரசியலின் போக்குகள், இன ஒற்றுமை, சமஷ்டி, அரசியல் தீர்வில் முஸ்லிங்கள் எதிர்பார்ப்பது போன்ற பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பிரதி செயலாளர் சட்டத்தரணி எம்.ஏ. அன்ஸில், கிழக்கின் கேடயம் பிரதானியும், அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளன தலைவருமான அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர் எஸ். எம். சபீஸ், அல்- மீஸான் பௌண்டஷன் தவிசாளரும், என்.டி.பி.எச்.ஆர். தேசிய கொள்கைப்பரப்பு செயலாளருமான யூ.எல். என். ஹுதா, நாம் ஊடகர் பேரவையின் தலைவரும், ஊடகவியலாளருமான யூ.எல். மப்ரூக் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்துகொண்டிருந்தனர்.

## இடமாற்றம்

திருகோணமலை நகராட்சி மன்றத்தின் தொழில் நுட்பஉத்தியோகத்தராக நீண்ட காலம் கடமையாற்றிய தியாகராஜா சசிதரன் இடமாற்றம் பெற்றுச் செல்வதை முன்னிட்டு, நேற்று முன்தினம் (31) பிரியாவிடை வைபவம் இடம்பெற்றது.

நிகழ்வில் வேலைஅத்தியட்சகர் நவரத்தினம் ராஜிதன், வேலைமேற்பார்வையாளர் குபேந்திரன், வேலைத்தள பகுதி உத்தியோகத்தர்கள் கலந்து சிறப்பித்தனர்.

அ. அச்சுதன்



தங்கியிருக்கும் நோயாளர்களுக்கு

# உணவு வழங்கல் நிறுத்தப்படும் அபாயம்

■ சுதத்.எச்.எம்.ஹேவா

நுவரெலியா மாவட்டத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் தங்கியிருந்து சிகிச்சைப் பெறும் நோயாளாளிகளுக்கு வழங்கப்படும் உணவுக்கான உரிய நிதி வழங்கப்படாமைக் காரணமாக, எதிர்வரும் நாட்களில் குறித்த நோயாளர்களுக்கு உணவை விநியோகிப்பதில் சிக்கல் நிலை ஏற்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நுவரெலியா மாவட்டத்திலுள்ள 46 அரசாங்க வைத்தியசாலைகளில் தங்கியிருந்து சிகிச்சைப் பெறும் நோயாளர்களுக்கு உணவு விநியோகிக்கும் ஒப்பந்தக்காரர்களுக்கு இதுவரை 3 மாதங்களுக்கான உரிய கொடுப்பனவு செலுத்தப்படவில்லை என்றும் இதனால் அவர்கள் பெரும் அசௌகரியத்துக்கு உள்ளாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் தாம் உணவு தயாரிப்புக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்யும் இடங்களுக்கு கடனாளிகளாக மாறியுள்ளதாகவும் ஒப்பந்தக்காரர்கள் தெரிவிக்கின்றனர்.



எனவே, தமக்கான கொடுப்பனவு கிடைக்காவிட்டால் எதிர்வரும் நாட்களில் நோயாளர்களுக்கு உணவை விநியோகிப்பதில் சிக்கல் நிலை ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் மத்திய மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் வைத்தியர் நிஹால் வீரசூரியவிடம் வினவியபோது, இதற்கு தேவையான நிதி தமக்கு உரியமுறையில் இதுவரை கிடைக்கவில்லை என்றும் இதனாலேயே உணவு விநியோக ஒப்பந்தக்காரர்களின் கொடுப்பனவை வழங்க முடியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனினும், நுவரெலியா மாவட்டத்தில் மாத்திரம் இந்தப் பிரச்சினை இல்லை என்றும் மாத்தளை, கண்டி ஆகிய மாவட்ட வைத்தியசாலைகளிலும் இந்த நிலையே காணப்படுவதாகவும் தெரிவித்த அவர், ஒப்பந்தக்காரர்களின் கொடுப்பனவுகளை எதிர்வரும் இரண்டு, மூன்று வாரங்களில் வழங்க முடியும் என நம்புவதாகவும் தெரிவித்தார்.

மண்ணையும், பெண்ணையும் மதித்து

# உரிய அங்கிகாரம் வழங்குவதே காங்கிரஸின் கொள்கை

■ எஸ்.கணேசன்




இலங்கை சனத்தொகையில் 52 சதவீதமானோர் பெண்களாக இருந்தும் பாராளுமன்றத்தில் 5 சதவீத பெண் பிரதிநிதித்துவம்கூட இல்லை எனத் தெரிவித்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சர்வதேச விவகாரங்களுக்கான பொருப்பாளரும், இ.தொ.காவின் உப தலைவருமான பாரத் அருள்சாமி, இந்நிலைமை மாற வேண்டும். பெண்களுக்கு உரிய இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு, பெண் பிரதிநிதித்துவம் கட்டாயமாக்கப்பட வேண்டும் என்றார்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான தெளிவூட்டல் பயிற்சி பட்டறை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சர்வதேச விவகாரங்களுக்கான பொறுப்பாளரும், இ.தொ. காவின் உப தலைவருமான பாரத் அருள்சாமியின் ஏற்பாட்டில் சர்வதேச பொது சேவைக்களுக்கான சம்மேளனத்தின் அனுசரனையில் கொட்டகலை சீ.எல். எப் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இன்றைய நவீன உலகை எடுத்துக்கொண்டால் வளர்ச்சியடைந்த பல நாடுகளிலும் பெண்கள் முக்கிய பதவிகளில் இருக்கின்றனர். அவர்களுக்கு உரிய இடம் வழங்கப்படுகின்றது. எமது நாட்டில் முன்னேற்றகரமான நிலைமை இல்லை. எமது நாட்டில் இருந்துதான் உலகில் முதலாவது பெண் பிரதமர் நியமிக்கப்பட்டார். இப்படிபட்ட எமது நாட்டில் இன்று சபாநாயகர் பதவிக்குகூட பெண்ணொருவர் தெரிவுசெய்யப்ப டுவதில்லை என்பது வேதனைக்குரிய விடயமாகும்.

இந்நிலைமை மாற வேண்டும். இதற்கான முன்னுதாரணத்தை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வழங்கியுள்ளது. கடந்த உள்ளூராட்சிசபைத் தேர்தலில் நாம் பெண்களுக்கு இடம் வழங்கினோம். தவிசாளராக கூட பெண்ணொருவர் தெரிவுசெய்யப்பட்டார். மண்ணையும், பெண்ணையும் மதித்து, உரிய அங்கிகாரம் வழங்கும் கொள்கையுடனேயே காங்கிரஸ் செயற்பட்டு வருகின்றது.

தேர்தல்களின் போது வேட்பாளர் பட்டியலில் 25 சதவீதம் பெண்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டு வந்தாலும் அத்திட்டம் நடைமுறையில் இல்லை. எனவே, அது கட்டாய சட்டமாக்கப்பட வேண்டும். அப்போதுதான் பெண்களுக்கு உரிய இடம் கிடைக்கும். மாறாக மகளிர் தினத்தன்று மட்டும் மகளிரை போற்றுவதால் மாற்றம் வரப்போவதில்லை என்றார்.

# ஒளிவிழா



பிறந்திருக்கும் புதிய வருடம் நாட்டுக்கும், மக்களுக்கும் சுபிட்சம் தரும் ஆண்டாக அமைய புது வருடத்தை வரவேற்று உடபுஸ்ஸலாவையில் சர்வ மதத்தவரையும் ஒன்றிணைத்து ஒளி விழா நடத்தப்பட்டது.

இந்தப் பகுதிக்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தர் சிவநேசன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மத குருமார்கள்,உடப்புஸலாவை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஆ.ரமேஸ்)








# விருது வழங்கல் விழா

மலையகம் 200 விருது வழங்கல் விழாவானது, கந்தலோயா தமிழ் வித்தியாலயத்தில் நேற்று முன்தினம்(31) நடைபெற்றது. இதில் பல்துறைகளில் சாதித்த, சாதித்துக்கொண்டிருக்கும் பலர் மலையகம் .lk மீடியா நெட்வேர்க்கினால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், கந்தலோயா பாடசாலை மாணவர்களின் நாடகம், நடனம் உள்ளிட்ட கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.( என்.ஆராச்சி)


# விசேட வழிபாடுகள்

புதுவருடத்தை முன்னிட்டு, கலஹா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் குணசேகர தலைமையில் விஷேட நிகழ்வு நடைப்பெற்றது. அனைத்து மத தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் ஒன்றிணைந்து, பால் பொங்கி வழிபாடுகளில் ஈடுபட்டனர்.( நவி)



பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பில்

# விழிப்புணர்வு கருத்தரங்கு



இலங்கையில் பெண்களுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகள் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்று நேற்றுமுன்தினம் (31) கொட்டகலை சி.எல். எப் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. சர்வதேச பொது சேவைகள் சம்மேளனத்தின் அனுசரணையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு, மகளிர் பிரிவு அமைப்பாளர்கள், பிரதேச சபை பெண் உறுப்பினர்கள், பணிமனை பெண் உறுப்பினர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்துக் கொண்டிருந்தனர். இந்நிகழ்வுக்கு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளர் மற்றும் நிதிச் செயலாளர் மருதப்பாண்டி இராமேஸ்வரன், உப தலைவர் பரத் அருள்சாமி உள்ளிட்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முக்கியஸ்தர்கள் கலந்துக் கொண்டிருந்தனர்.

# போதையில் மனைவியின் பற்களை கழற்றிய கணவன்

■ சுமணசிறி குணதிலக

மொனராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூப்பன்ன-வெலிவத்த பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவரின் பற்களை அவரது கணவன் கழற்றிய சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

டிசெம்பர் மாதம் 29ஆம் திகதி இரவு மதுபோதையில் வந்த கணவனுக்கும் அவரது மனைவிக்கும் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றி இறுதியில் பெண்ணின் முகத்தில் கணவன் தாக்கியுள்ளார். இதன்போது, அப்பெண்ணின் நான்கு பற்கள் கழன்று விழுந்துள்ளன.

அத்துடன், இத்தாக்குதலில் காயமடைந்த மூன்று பிள்ளைகளின் தாயான குறித்த பெண், மொனராகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், கணவன் தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தப்பிச் சென்ற நபரைக் கைதுசெய்வதற்கான விசாரணைகளை மொனராகலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

பெருந்தோட்ட பெண்களின்

# பொருளாதாரத்தை வலுப்படுத்த நடவடிக்கை

■ மஹேஸ் கீர்த்திரத்ன

பெருந்தோட்ட பெண்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் அவர்களின் போசாக்கு நிலையை உயர்த்தவும் தற்போதைய அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹன திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய உதவியின் கீழ் பெருந்தோட்டப் பெண்களின் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ், பெண்களுக்கான சுகாதார பொருள்களை விநியோகிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர்,

தோட்ட மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் கவனம் செலுத்தப்பட்டு அது நிறைவேற்றப்பட்டு வருகின்றது. மாத்தளை மாவட்டத்தில் குறிப்பாக பெருந்தோட்ட மக்களின் பொருளாதார சமூக அபிவிருத்திக்காக புத்தாண்டில் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம் என்றார்.



அன்று பாரிய சவால்களுக்கு மத்தியில் நாட்டுக்காக பொறுப்புகளை ஏற்றுக்கொண்ட தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் குறித்து அதிகம் கவனம் செலுத்தியுள்ளார்.

விசேடமாக மாத்தளை மாவட்டத்திலுள்ள பெருந்தோட்ட மக்களின் பொருளாதார, சமூக அபிவிருத்திக்காக நாம் புதிய வருடத்தில் பல புதிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம் என்றார்.

அந்த வேலைத்திட்டங்கள் தொடர்பில் எதிர்வரும் நாட்களில் பிரதேச மட்டங்களில் கலந்துரையாடி மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சிப்போம் என்றார்.

# 17 வெற்றிடங்களுக்கு புதிய நியமனங்கள்

■ சுமணசிறி குணதிலக

60 வயது முழுமையாகப் பூர்த்தியடைந்து ஓய்வுப் பெற்ற ஊவா மாகாணசபைக்குரிய 17 நிறுவனங்களில் ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு புதிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஊவா மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (30) ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில தலைமையில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதற்கமைய, ஊவா மாகாண பொது சேவை ஆணைக்குழுவின் செயலாளர் காமினி மஹிந்தபால ஜோபியாஸ், ஊவா மாகாண கல்வி பணிப்பாளர் ரோஹித அமரதாச, மாகாண பொது சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஜீவந்த ஹேரத், மாகாண உள்ளக கணக்காய்வு பணிப்பாளர், எஸ். ஜயசிங்க, மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் ஜே.எம். சேனாதீர, ஊவா மாகாண கட்டடப் பணிப்பாளர். கங்காநந்தா, ஊவா மாகாண சபை வரவு செலவு திட்ட பணிப்பாளர் சமந்த கித்சிறி ஆகியோருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன், பதுளை பிராந்திய கல்வி பணிப்பாளர் தம்மிக்க ஹேரத், பசறை பிராந்திய கல்வி பணிப்பாளர் சரத் ரணசிங்க, வெலிமடை பிராந்திய கல்வி பணிப்பாளர் சரீனா பேகம், வில்வ பிராந்திய கல்வி பணிப்பாளர் எஸ். திருமதி விமலவீர, பண்டாரவளை பிராந்திய சுற்றுலாப் பணிப்பாளர் சாரங்கி ஹெட்டியாராச்சி, மாகாண கைத்தொழில் பணிப்பாளர் சம்பத் நிஷங்க, மாகாண நன்னடத்தை ஆணையாளர் என். சதுரங்கனி, மாகாண கல்வி அமைச்சின் பணிப்பாளர் டி. சம்பத், மாகாண சுகாதார அமைச்சர் ஆர்.எம். தயாரத்ன, 17 மொனராகலை உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பி. .குமாருக்கு மேற்படி நியமனங்கள் வழங்கப்பட்டன.

மாகாண பிரதம செயலாளர் திரு.பி.பி. விஜேரத்ன மற்றும் ஆளுநரின் செயலாளர் திருமதி ஆர்.எச். சி.பிரிசயந்தி ஆகியோரும் இந்த நியமனத்தில் இணைந்து கொண்டனர்.

பொலிஸாரின் பிடியிலிருந்து தப்பியவர்

# மாடியிலிருந்து விழுந்து உயிரிழப்பு

பொலிஸாரால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட இளைஞர் ஒருவர், வீடொன்றில் மறைந்திருந்த நிலையில், பொலிஸார் அவரைக் கைதுசெய்ய சென்ற போது, வீட்டின் மேல் மாடியிலிருந்து கீழே விழுந்து உயிரிழந்துள்ளார்.

கம்பளை- போதலாபிட்டிய பிரதேசத்திலுள்ள வீடொன்றிலேயே இச்சம்பவம் இடம்பெற்றதென கம்பளை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இளைஞர் பொலிஸாரிடமிருந்து தப்பிச் செல்ல முயற்சித்த போதே, இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேல் மாடியிலிருந்து விழுந்த இளைஞன் படுகாயமடைந்து கம்பளை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போது உயிரிழந்துள்ளார்.

# கசப்புணர்வுகளைக் களைந்து நல்லனவற்றை செயற்படுத்த உறுதிபூணுவோம்

நாணயத்துக்கு எவ்வாறு இரண்டு பக்கங்கள் இருக்கின்றனவோ, அவ்வாறுதான் ஒவ்வொருடைய வாழ்க்கையிலும், நல்லது, கெட்டது என இரண்டு பக்கங்கள் இருக்கவே செய்யும். கெட்ட பழக்கங்களை வழக்கமாக்கிக் கொண்டிருந்த பலரும், உறுதியெடுத்து அடியோடு கைவிட்டுவிடுவர். இன்னும் சிலர் அவ்வப்போது பங்கெடுப்பர்.

2022 டிசெம்பர் 31ஆம் திகதியன்று, "இதுதான் கடைசி; இன்றோடு விட்டுவிடுவேன்" என உறுதிபூண்ட பலர், இன்றுமட்டுதான் எனக்கூறி, 2023 டிசெம்பர் 01ஆம் திகதியன்றும் அதே பழக்கத்துக்குள் அடியெடுத்து வைத்துவிடுவர்.

வாழ்க்கையை முன்னேற்ற பாதைக்குக் கொண்டு செல்லும் வகையில், இன்னும் சிலர் உறுதிபூண்டு முதலாம் திகதியுடன் ஆரம்பித்தும் விடுவர். கெட்டபழக்கங்கள் எளிதில் தொற்றிக்கொள்ளக்கூடியவை. அவற்றை ஆராய்ச்சி செய்யாமல் விட்டுவிடுவதே மேல். நல்லப் பழக்கங்களை வழக்கமாக்கிக்கொண்டால் வாழ்வு வளம்பெறும்.

கடந்த பல வருடங்களாக பெரும் நெருக்கடிக்கு மத்தியில் வாழ்ந்த நமக்கெல்லாம், மலர்ந்திருக்கும் புத்தாண்டு ஒளிவீசவேண்டும். எனினும், விலை அதிகரிப்பு உள்ளிட்டவை, இன்னுமின்னும் நெருக்கடிக்குள் தள்ளிவிடுமோ என்ற பேரச்சம் ஒவ்வொருடைய மனங்களிலும் சூழ்கொண்டுவிட்டது.

கொரோனாவும் இன்னுமே வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது, ரஷ்யா-உக்ரேன் யுத்தம் நிறைவுக்கு வரவில்லை. இவையிரண்டால் உலக நாடுகள் பலவும் பல்வேறான நெருக்குவாரங்களுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்றன. இதற்கிடையில், இந்திய-சீனா, சீனா-திபெத்து எல்லைகளில் ஏற்பட்டிருக்கும் பதற்றம், பதைபதைக்கச் செய்துகொண்டிருக்கின்றது.

புத்தாண்டு பிரார்த்தனையில், சமாதானம் மலரவேண்டும் என்பதே பலருடைய பிரார்த்தனையாக இருந்திருக்கும். அந்த நல்லுள்ளங்களின் பிரார்த்தனைகளைப் போலவே, யுத்தம் நடக்கும் நாடுகளில் சமாதானம் மலரவேண்டும். யுத்தத்துக்கான பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கும் எல்லைகளில், பதற்றங்கள் தணியவேண்டும்.

மீண்டுமொரு யுத்தத்தையோ, கொரோனா பரவுதலையோ, இல்லையேல், வாட்டிவதைக்கும் நெருக்கடிகளுக்கோ முகங்கொடுப்பதற்கு இந்தப் பூமி தயாராக இல்லை. ஏற்பட்டிருக்கும் சிக்கல்கள் தீர்க்கப்பட்டு,, உலக நாடுகளில் சமாதானம் மலரவேண்டும். அதனூடாகவே, நல்ல எண்ணங்களும் சிந்தனைகளும் மலரும் என்பதில் ஐயமில்லை.

ஈடுசெய்யமுடியாத பல இழப்புகள் கடந்த ஆண்டுகளில் ஏற்பட்டிருக்கும்; வாய்ப்புகள் கிடைக்காமல் போயிருக்கும். இருப்பதை காப்பாற்றிக்கொள்வதற்கு பலரும் சிரமப்பட்டிருப்பர். முயற்சியை கைவிடாதவர்களின் வாழ்க்கையில் இவ்வாறான சிரமங்கள் ஏற்பட்டிருக்காது. அந்த முயற்சி, பிறந்திருக்கும் புத்தாண்டிலும் தொடருமாயின் வாழ்கை எளிதாக அமையும்.

மலர்ந்திருக்கும் புத்தாண்டும் நெருக்கடிமிக்கதாகவே அமையுமென பலரும் அச்சமூட்டக்கூடும். வாழ்க்கையோட்டத்தில் மேடு, பள்ளங்கள் இருக்கதான் செய்யும். அவற்றில் விழுந்துவிடாது, பயணிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். போகும் வழியில், தடுமாறிக்கொண்டிருப்போரை குழிக்குள் தள்ளிவிடாது, முடிந்தளவு கைகொடுக்க முயலவேண்டும்.

இவ்வாறான நல்ல எண்ணங்களை மனதில் கொண்டு செயலாற்றவேண்டும். தூய எண்ணங்களுடன் செயற்படுவதே நன்மை பயக்குமென நினைவுறுத்தி, பிறந்திருக்கும் புத்தாண்டு, ஒவ்வொருடைய வாழ்க்கையிலும் ஒளிவீசவேண்டுமென நாமும் பிரார்த்தனை செய்கின்றோம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

ஒளிக்கு எதிரானது இருள் என்கின்றோம். ஆனால், ஒளியும் இருளும் மனிதர்களுக்கு மட்டுமல்ல, சகல ஜீவன்களுக்கும் தேவையானவை.

உழைப்பவர்களுக்கு உறக்கம் தேவை; இரவு, பகல் முழுவதும் தொடர்ந்து வேலை செய்ய முடியாது. பகலில் கடுமையாக வேலை செய்பவர்களுக்கு, இரவில் ஓய்வும் உறக்கமும் தேவையாகும்.

விழித்து எழுந்ததும், மனிதன் தனது சக்தியை மீண்டும் புதுப்பித்துக் கொள்கின்றான். சதா உறங்குபவன் தன்னிலை மறக்கிறான்.

இராக்காலம் பல சேவைகளைச் செய்கின்றது. இரவில் வானத்தை நோக்குங்கள். பௌர்ணமி வரும் காலத்தில், வானத்தின் வனப்பு வர்ணிக்க இயலாத அழகுடன் மிளிரும். எத்தனை முறை பார்த்தாலும் விந்தையும் அற்புதமும்தான்!

கும்மிருட்டில் நட்சத்திரக் கூட்டங்கள்; எண்ண முடியுமா எங்களால்? சந்திரனின் எழிலும் வானத்தின் வளைவும் எப்படியெல்லாம் எங்களை மயக்குகின்றன.

பாரிய வெளியை பகலில் நோக்கினால், பூமி தட்டையாகத் தோன்றும். அடிவானம் வளைந்து பூமியைத் தொட்டதுபோல் பொய்த் தோற்றம் தென்படும். இயற்கை எங்களைக் காப்பாற்றுகின்றது என்பது மட்டுமல்ல, எங்களுடன் விளையாடவும் செய்கின்றது!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# சிறுபான்மையின மக்களின் நில அபகரிப்புக்கு தீர்வு என்ன?

ஹஸ்பர் ஏ ஹலீம்

இலங்கையில் சிறுபான்மை சமூகங்களான தமிழர், முஸ்லிம்கள் மீதான ஒடுக்குமுறையும் திணிப்புகளும் பறிப்புகளும் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன.

இவற்றில் மிக முக்கியமானதாக நில அபகரிப்பு காணப்படுகின்றது. தமிழ், முஸ்லிம் ஆகிய இனங்கள் காலம்காலமாக, பாரம்பரியத்துடன் வாழ்ந்துவந்த வளமான காணிகள், இலங்கை அரசால் திட்டமிட்டு பறிக்கப்படுகின்றன; கைப்பற்றப்படுகின்றன.

குறிப்பாக, வனவள திணைக்களம், தொல்பொருள் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி சபை போன்ற அரச நிறுவனங்களே இவ்வாறு காணிகள், சொத்துகள், வளங்களைப் பறிப்பதையே தமது நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றன. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணிகள் பறிக்கப்படுவதை நாம் கண்கூடாகக் கண்டு, அனுபவப்பட்டு வருகின்றோம். தற்போது மலையகத்திலும் தமிழ் பேசும் மக்கள் வாழும் இடங்களில் பல்வேறு காரணங்களைக் கூறி, காணிகள் பறிக்கப்படுவதை அன்றாடம் செய்திகளில் காண்கின்றோம்.

திருகோணமலை மாவட்டம், கிண்ணியா பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட உப்பாறு கிராம சேவகர் பிரிவில் உள்ள கிராமம் 'தளவாய்' என்ற சிறிய கிராமம் ஆகும். இந்தக் கிராமத்தில் தமிழ் , முஸ்லிம் மக்கள் ஐக்கியத்துடன் வாழ்ந்து வந்தார்கள். இந்நிலையில், அம்மக்களுக்கு சொந்தமான நிலங்களை, வனஜீவராசிகள் திணைக்களம் அபகரித்துள்ளதாக அம்மக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

தளவாய் கிராமத்தில் மக்கள் வாழ்ந்தற்கான அத்தாட்சியாக, 1986 தொடக்கம் 1990 வரையான வாக்காளர் இடாப்பில், இவர்களின் பெயர்கள் பதிவு செய்யப்பட்டு இருக்கின்றன. சுமார், 70 வரையான குடும்பங்கள், வாக்காளர் இடாப்பில் பதிவாகியுள்ளமை தெரியவருகிறது.

ஆனாலும், வனஜீவராசி திணைக்களம் யானை வேலி அமைத்து எல்லையிட்டு, இந்த மக்களின் காணிகளைப் பலவந்தமாக பறித்தெடுத்து உள்ளது. இக்கிராமத்தில் சுமார் 2,500க்கும் மேற்பட்ட ஏக்கர் கொண்ட நிலப்பரப்பு, விவசாய செய்கைக்கு உகந்த வளமான பூமியாகக் காணப்படுகிறமை இந்தக் கிராமத்தின் சிறப்பம்சம் ஆகும்.

இந்தக் கிராமத்தில், செழிப்புடன் வாழ்ந்த மக்கள், 1990களில் கொடிய யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்தார்கள். ஆனால், ஏறத்தாள 33 வருடங்கள் கடந்த நிலையிலும் இந்த மக்களால், தமது சொந்தக் காணியில் வாழமுடியவில்லை. தமது விவசாய வாழ்வாதாரத்தையும் வாழும் இல்லத்தையும் இழந்து, நடைப்பிணங்களாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களது வளம்மிகுந்த விவசாய காணிகள், மேட்டு நிலப் பயிர்ச் செய்கை என்ற பெயரில் பறிக்கப்பட்டுள்ளன.

1990ஆம் ஆண்டு தளவாய் கிராமத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்கள், கிண்ணியாவின் பல பிரதேசங்களில் குடியமர்ந்து திக்குத்திக்காக வாழ்ந்தார்கள். இந்நிலையில், 1994களில் குறித்த கிராமத்துக்கு மீள்குடியேற சென்றபோது, அந்த மக்களை மீளக்குடியேற விடாது இராணுவத்தினர் தடுத்தனர்.

இன்று வரை சொந்தக் காணியை இழந்த நிலையில், காணியும் வீடுகளும் இன்றி, வாடகை வீடுகளிலும் உறவினர்களின் வீடுகளில் ஒட்டிக்கொண்டும் கிண்ணியாவிலேயே வாழ்ந்து வருகின்றார்கள்.


இந்த நிலஅபகரிப்பு தொடர்பிலும் தங்கள் அடிப்படை உரிமைகள் பற்றியும் பல தடவைகள், அரசியல்வாதிகள், உரிய உயரதிகாரிகள் மட்டத்திலும் தெரியப்படுத்திய போதும், 'ஊமை கண்ட கனவாக' அப்படியே அமுக்கி விடப்பட்டு, வெறும் ஏமாற்றம் மாத்திரமே இன்றுவரை எஞ்சியுள்ளது.

அரசாங்கம் மாறிமாறி ஆட்சிக்கு வந்த போதிலும், சிறுபான்மை சமூகம் மீதான அடக்கு முறை தொடர்ந்த வண்ணமே இருக்கிறது. இதன் ஒரு பகுதியாக, வடக்கு, கிழக்கில் மக்களின் நிலம் அபகரிக்கப்படுவது என்பது புதிதல்ல!

ஆரம்ப காலம் தொட்டு, இம்மக்கள் வாழ்ந்ததற்கான காணிகளின் ஆவணங்கள் இருந்த போதிலும், 2004இல் ஏற்பட்ட ஆழிப்பேரலையால், இதற்கான சான்றுகள், ஆவணங்கள் நீரால் அடித்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கின்றனர்.

இது ஒரு குடியேற்ற கிராமமாக இருந்த போதிலும், மக்களின் இடப்பெயர்வால் சொல்லொன்னா துயரங்களை எதிர்கொண்ட நிலையில், சொந்தக் காணியை பெறமுடியாத நிலைக்கு தள்ளப்பட்ட இம்மக்களுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுப்பது யார்?

தேசிய உற்பத்தியில் வருமானமீட்டக்கூடிய வகையில், விவசாய உற்பத்திகளை இங்கு மேற்கொள்ள முடியும். தற்போது வனஜீவராசிகள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதால், யாரும்




அங்கு செல்ல முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளதுடன், அண்டிய பகுதிகளில் மண் அகழ்வும் இடம்பெற்று வருகின்றது .

இதற்கான தீர்வை, தளவாய் கிராம மக்கள் வேண்டி நிற்கின்றனர். ஆனால், அது வெற்றியடையவில்லை; தொடர்ந்து செல்லும் உரிமை போராட்டமாகவே மாறியுள்ளது.

குறித்த மக்களின் வாழ்வியல் உரிமைக்கான கோரிக்கையின் பதிலாக, காணியோ நிரந்தர வாழ்வாதார திட்டங்களோ வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கின்றனர். இவர்களின் முக்கிய கோரிக்கைகளாக காணப்படுவது, உரிய பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டும்; வாழ்வாதார உதவிகள், காணிக்கான ஆவணங்கள் போன்றவற்றை சீராக, திறம்பட செய்து கொடுக்கப்பட வேண்டும் என்பவையாகும்.

காலாகாலமாக திருகோணமலை மாவட்டத்துக்கு மக்கள் பிரதிநிதிகள், சிறுபான்மை சமூகம் சார்பில் இருந்தாலும், இவ்வாறான விடயங்கள் மறைக்கப்பட்டே வருகின்றன. இந்த நிலைமாறி, இம்மக்களின் தலைவிதியை தீர்மானிக்கும் சக்தியாக மாற வேண்டும்.

நில அபகரிப்பை தடுத்தி நிறுத்தி, தனியார் நிலங்கள் உரியவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் . நாட்டின் தற்போதைய நிலையில், பல கஷ்டங்களுக்கு மத்தியில், அன்றாட ஜீவனாம்சத்துக்கு போதுமான வருமானமின்றி, தினக்கூலித் தொழிலாளிகளாக வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலை மாறி, இவ்வாறாக பலவந்தமாக அபகரிக்கப்பட்ட விவசாய காணிகளை, இவர்களுக்கு கையளிக்க, இந்த அரசாங்கம் முன்வர வேண்டும். அப்போது தான் அம்மக்களின் வாழ்வாதாரம் மேம்படுவதுடன், இதில் இருந்து உழைத்து வாழக் கூடிய நிலை ஏற்படும்.

இது தொடர்பில் சமூக ஆய்வாளர் எம். எம். நசுருதீன் கருத்துத் தெரிவிக்கையில்;

"கடந்த காலங்களில், தளவாய் காணி தொடர்பில் ஆய்வை மேற்கொண்டுள்ளோம். அம்மக்கள் சொந்தக் காணியின்றி தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு, அக்காணியை வனஜீவராசி திணைக்களத்தினர் கையகப்படுத்தியுள்ளனர். விவசாய பூமியான இப்பகுதி, உரிய மக்களுக்கு சொந்தமாக வழங்கப்படல் வேண்டும். மக்களை ஏமாற்றும் நிலை தான் தற்போது இருந்து வருகின்றது" என்றார்.

மக்களுடைய சொந்தப் பூமியாக இருந்த போதிலும், அவர்களது நிலங்களைச் சூறையாடுவது அரச துறையினரின் அடாவடி போக்கை வெளிப்படுத்திவருகின்றன.

இவ்வாறான திணைக்களங்களே, திருமலை மாவட்டத்தை பொறுத்தமட்டில், சிறுபான்மை இன சமூகங்களைத் திட்டமிட்டபடி வாட்டிவதைக்கின்றன.

பல இடங்களில், தொல்பொருள் என்ற போர்வையிலும் இது போன்று பல அடாத்தான நில அபகரிப்புகளிலும் நில அளவீடுகளிலும் அத்துமீறிய வண்ணம் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இது தொடர்பில் மக்கள் கரிசனை கொண்டு, தங்களது உரிமைகளை வென்றெடுக்க பலமுறை முயன்ற போதும், உரிய துறையினரும் மக்கள் பிரதிநிதிகளும் கண்கொண்டு பார்ப்பதில்லை .

நில ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்த துப்பில்லாத நாடாளுமன்ற உறுப்பினர்கள், தங்களின் சுகபோகங்களில் மாத்திரமே கண்ணும்கருத்துமாக இருக்கின்றனர். கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தின் கீழ், கடந்த காலங்களில் 20 ஆம் திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்தவர்களில் ஒருவர், திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்தவராவர். சிறுபான்மையின பாராளுமன்ற உறுப்பினரான அவர், மக்களின் இவ்வாறான நில ஆக்கிரமிப்பு தொடர்பில், எவ்வித முயற்சியும் மேற்கொள்ளவும் இல்லை; அதனை மீளப்பெற்றுக்கொடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் நிலத்துக்கு சொந்தமானவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மக்களின் நலன், வாழ்வாதாரம் கருதி, உரிய நிலம், உரிய மக்களுக்கு கிடைத்து, நிரந்தர தீர்வு எப்போது கிட்டும் என்பதே, தளவாய் கிராம மக்களின் ஏகோபித்த எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

## கடிதங்கள்

### நெருக்கடியில் சிக்கித்தவிக்கும் முக்கொம்பன் மகாவித்தியாலய மாணவர்கள்

இலங்கை போக்குவரத்து சபையின் பஸ்கள் சேவையில் ஈடுபடாததன் காரணமாக, முக்கொம்பன் மகாவித்தியாலயத்துக்கு வருகை தருவதில் மாணவர்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சியில் இருந்து காலையில் புறப்படும் பஸ், புநகரி, அரசபுரம், நேரடம்பன் வழியாக, முக்கொம்பனை வந்தடையும். இப்பஸ்ஸில் அரசபுரம், நேரடம்பன் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 100 வரையான மாணவர்கள் முக்கொம்பன் மகாவித்தியாலயத்துக்கு வருகை தருவார்கள்.

கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக அரசபுரம், நேரடம்பன் வீதிகளில் பெருங்குழிகள் ஏற்பட்டுள்ளதன் காரணமாக, பஸ் சேவைகள் இடம்பெறவில்லை. இதன் காரணமாக, பாடசாலைக்குச் சென்று கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

இந்த நிலைமை தொடர்பாக, கிளிநொச்சி மாவட்ட செயலகம், கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிமனை, பூநகரி பிரதேச செயலகம், பூநகரி பிரதேச சபை என்பன நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மாணவர்கள் பாடசாலைக்கு வந்து திரும்பக் கூடிய வகையில் பஸ் சேவையை நடத்துவதற்கு, வீதியைத் தற்காலிக புனரமைப்பு மேற்கொள்ள வேண்டும் எனவும் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

–நடராசா கிருஸ்ணகுமார்

# Dragons of Asia 2022 விருதுகளில் செலான் வங்கிக்கு வெள்ளி விருது




செலான் வங்கி, Dragons of Asia வினைத்திறனான சந்தை ப்படுத்தல் விருதுகள் 2022நிகழ்வில் வெள்ளி விருதை சுவீகரித்திருந்தது. முகவர் நிறுவனங்கள், வாடிக்கையாளர்களால் ஆசிய பிராந்தியத்தில் முன்னெடுக்கப்பட்டிருந்த பெறுபேறுகள் அடிப்படையிலான சிறந்த சந்தைப்படுத்தல் தொடர்பாடல்களை தெரிவு செய்து கௌரவிக்கும் வகையில் இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வங்கியினால் முன்னெடுக்கப்பட்ட #ResponsibleMe எனும் திட்டம் வெற்றிகரமாக அமைந்திருந்ததுடன், கொவிட்-19 தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதில் சுய விழிப்புணர்வு மற்றும் தனிநபர் பொறுப்பு போன்றவற்றின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் அமைந்திருந்தது. அதனூடாக, சிறந்த திட்டம், தன்னார்வ சந்தைப்படுத்தல் அல்லது பொதுத் துறைக்கான திட்டம் என்பதன் கீழ் வெள்ளி விருதை சுவீகரிக்க செலான் வங்கிக்கு முடிந்தது. இந்தப் பிரிவில் விருதை வென்ற ஒரே வங்கியாக செலான் வங்கி காணப்பட்டது.

2021 ஆம் ஆண்டில் கொவிட்-19 தொற்றுப் பரவலின் மூன்றாம் அலைத் தாக்கம் மோசமாக காணப்பட்ட வேளையில், அன்புடன் அரவணைக்கும் வங்கி, பொது மக்கள் மத்தியில் தாம் பாதுகாப்பாக இருக்க வேண்டியதன் முக்கியத்துவம் மற்றும் வைரஸைக் கட்டுப்படுத்துவதில் அதன் பங்களிப்பு தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியமை தொடர்பில் கவனம் செலுத்தியிருந்தது. பரிந்துரைக்கப்பட்ட பாதுகாப்பு செயற்பாடுகளை பின்பற்றுவதில் ஊக்கமின்மை அவதானிக்கப்பட்டிருந்த நிலையில், தொற்றுப் பரவலால் சோர்வடைந்த நிலையை மக்கள் எதிர்கொண்டிருந்த நிலையில், இந்த விழிப்புணர்வு நடவடிக்கை முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருந்தது.

முகக் கவசம் அணியுங்கள் அல்லது சமூக இடைவெளியைப் பேணுங்கள் என்பன சாதாரண தகவல்களாக மாத்திரமே அமைந்திருக்கும் என்பதை வங்கி உணர்ந்திருந்தது. எனவே, இந்தத் தகவலை மக்கள் மத்தியில் ஆழமாக சென்றடையக்கூடிய வழிமுறையை பற்றி செலான் வங்கி சிந்தித்திருந்தது. இதனூடாக தூய்மையான கரங்களுடன், சற்று உருக்கமாக எனும் தொனிப்பொருளுடனான திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இந்தத் திட்டத்தை முன்னெடுக்கும் வகையில் செலான் வங்கியின் அங்கத்தவர்கள் #ResponsibleMe எனும் தகவலை பொது மக்கள் மத்தியில் பரவலடையச் செய்வதற்கான பொறுப்பை தாம் ஏற்று, தமது சொந்த சமூக ஊடக வலைத்தளப் பகுதிகளில் சொந்தக் கருத்துக்களை எழுப்ப ஆரம்பித்தனர். சமூகத்தில் பிரதான கருத்தை சென்றடையச் செய்யக்கூடிய செல்லாக்கைக் கொண்டிருந்தவர்களும் இதனுடன் இணைந்து #ResponsibleMe என்பதை பிரபல்யப்படுத்தியிருந்தனர்.

நீண்ட கால அடிப்படையிலான தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக, தவிர்ப்பு முறைகளை முன்னெடுப்பதற்கு ஒவ்வொருவரும் தனித்தனியான முறையில் பொறுப்பேற்று இயங்குவதற்கு வங்கி மனநிலை மாற்றத்தை ஏற்படுத்துவது பற்றி கவனம் செலுத்தியிருந்தது. பொறுப்பு வாய்ந்த நிறுவனம் எனும் வகையில், இந்தத் தகவலை மக்கள் மத்தியில் பரவலடையச் செய்வதற்காக மெய்நிகர் ஊடக தகவலை பரப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டது. டிஜிட்டல் பகுதியில் செயலில் இருக்கும் ஊடகவியலாளர்களை ஈடுபடுத்தியிருந்தது. சுகாதார ஊக்குவிப்பு பணியகத்தின் பங்காண்மையுடன் இந்த விடயம் தொடர்பாக நேர்காணல்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

செலான் வங்கியின் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைகளுக்கான உதவி பொது முகாமையாளர் காமிக டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில், "#ResponsibleMe பிரச்சாரத் திட்டம் என்பது உரிய காலத்தில் முன்னெடுக்கப்பட்டிருந்தது. செலான் வங்கி தனது வழமையான வியாபாரச் செயற்பாடுகளுக்கு அப்பால் சென்று, சமூகத்தில் ஒன்றிணைந்து தொற்றுப் பரவலிலிருந்து விடுபடுவதற்கான தேவையையும், எம் ஒவ்வொருவருக்கு மத்தியில் காணப்படும் பொறுப்புகளை உணர்த்துவதிலும் முக்கிய பங்காற்றியிருந்தது. அனைவரின் பாதுகாப்பையும் உறுதி செய்வதனூடாக மாத்திரமே எல்லோராலும் சாதாரணமாக இயங்கக்கூடியதாக இருந்தது." என்றார்.

"தொற்றுப் பரவலுக்கு மத்தியில், இந்தத் திட்டத்தை பாரிய மட்டத்தில் முன்னெடுப்பது என்பது இலகுவான காரியமாக அமைந்திருக்கவில்லை. உற்பத்தித்திறன் மற்றும் குழுநிலைச் செயற்பாடு போன்றவற்றை பாதிக்கும் சில காரணிகள் காணப்பட்ட போதிலும், இந்தத் திட்டத்தில் ஈடுபட்டிருந்த அனைவரும், தமது முழு ஆற்றலையும் வெளிப்படுத்தியிருந்தனர். Boutique Agency Network, Third Shift மற்றும் Ogilvy PR போன்ற முகவர் பங்காளர்களின் பங்களிப்பு மற்றும் ஆதரவின்றி #ResponsibleMe என்பதை முன்னெடுத்திருக்க முடியாது. இந்தத் திட்டத்தை முன்னெடுக்கும் போது சுகாதார ஊக்குவிப்புப் பணியகத்திலிருந்து எமக்கு கிடைத்திருந்த ஆதரவுக்கும் நன்றி தெரிவிக்கின்றோம். ஒரு நபரின் செயற்பாடுகளுக்கு பிரத்தியேகமான பொறுப்பை ஏற்கச் செய்து, தொற்றுப் பரவலை கட்டுப்படுத்தும் நடவடிக்கை வெற்றியளித்திருந்தது. என Silver Dragon பற்றி குறிப்பிட்டார்.

# SLT–MOBITEL நத்தார் பண்டிகையை நிகரற்ற இணைப்புடன் கொண்டாடியது



பண்டிகைக் காலத்தில் ஏனையவர்களுக்கு பரிசுகளை வழங்கும் பாரம்பரியத்தை தொடரும் வகையில் SLT-MOBITEL, "நிகரற்ற இணைப்பின் நத்தார்" எனும் தொனிப்பொருளில் அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது. தேசிய மட்டத்தில் சமூக வலுவூட்டல் திட்டமாக இது அமைந்திருந்ததுடன், சகல சமூகத்தாரையும் பண்டிகையை கொண்டாடுவதற்கு ஆதரவளிக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

SLT-MOBITEL இன் சூழல்சார் சமூக ஆளுகை (ESG) திட்டத்தின் அங்கமாக "நிகரற்ற இணைப்பின் நத்தார்" கொண்டாடப்பட்டது. சமூக மேம்பாட்டுக்கும் வலுவூட்டலுக்கும் உதவும் வகையில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்தத் திட்டத்தினூடாக, இலங்கையின் சகல பாகங்களையும் சேர்ந்த சிறுவர்களுக்கு புத்தகங்கள் மற்றும் இதர அன்பளிப்புகள் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், புதிய கல்வியாண்டுக்கு தம்மை தயார்ப்படுத்திக் கொள்ள உதவியாக அமைந்திருந்தது.

நாமக்கல்:

# பட்டாசு வெடித்ததில் தம்பதி உட்பட 4 பேர் பலி

## 6 விடுகள் தரைமட்டம்



நாமக்கல் மாவட்டம் மோகனூர் மேட்டுத்தெருவைச் சேர்ந்தவர் தில்லைகுமார் (35),குமரி பாளையத்தில் பட்டாசு குடோன் வைத்து, வியாபாரிகளுக்கு பட்டாசு மொத்த விற்பனை செய்து வந்தார்.

இந்நிலையில், புத்தாண்டுக்கு பட்டாசு விற்பனை செய்ய வீட்டிலும் அதிக அளவில் பட்டாசுகளை வைத்திருந்தார். தில்லைகுமார் தனது மனைவி பிரியங்கா (28), மகள் சஞ்சனா (4), தாய் செல்வி (60) ஆகியோருடன் உறங்கினார். அதிகாலை 3 மணி அளவில் அவரது வீட்டில் தீ விபத்து ஏற்பட்டு பட்டாசுகள் வெடித்தன. சத்தம் கேட்டு எழுந்த தில்லைகுமார் தனது மகள் சஞ்சனாவை அருகில் உள்ள தனது நண்பரிடம் கொடுத்துவிட்டு, மனைவி மற்றும் தாயுடன் சேர்ந்து தண்ணீர் ஊற்றி தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

அதற்குள் தீ வேகமாக பரவி பட்டாசுகள் வெடித்து சிதறியதோடு, வீட்டில் இருந்த 2 சமையல் எரிவாயு சிலிண்டர்களும் வெடித்து சிதறின. இதில், அவரது வீடு மற்றும் அவரது வீட்டின் அருகே இருந்த 5 வீடுகள் (குடிசை மற்றும் ஓட்டு வீடுகள்) தரைமட்டமாகின. 20-க்கும் மேற்பட்ட வீடுகளின் மேற்கூரைகள் சேதமடைந்தன. இதில், தில்லைகுமார் மற்றும் அவரது வீட்டின் அருகே வசித்து வந்த பெரியக்காள் (72) ஆகியோர் உடல் சிதறி உயிரிழந்தனர். பிரியங்கா, செல்வி ஆகியோர் கட்டிட இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தனர்.

தகவல் அறிந்து சென்ற நாமக்கல், கரூர், மோகனூர் தீயணைப்பு வீரர்கள் 3 மணிநேர போராட்டத்துக்கு பின்னர் தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.பின்னர் பொக்லைன் வாகனம் மூலம் இடிபாடுகளை அகற்றி உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்டு, நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். காயம் அடைந்த 14 பேரும் நாமக்கல் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

பெங்களூரு:

# ஓர் அங்குலத்தையும் அபகரிக்க முடியாது



எல்லையில் வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருவதால் இந்தியாவின் ஓர் அங்குல நிலத்தை கூட யாரும் அபகரிக்க முடியாது என்று மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா 3 நாட்கள் சுற்றுப்பயணமாக கர்நாடகம் வந்துள்ளார்.

இந்திய-திபெத் எல்லை பகுதியில் பணியாற்றும் நமது வீரர்கள் ஹிமாவீர் என்று அழைக்கப்படுகிறார்கள். இந்த பட்டம் பத்மபூஷண், பத்ம விபூஷண் உள்ளிட்ட விருதுகளை விட பெரிதாகும். ஹிமாவீர் என்ற பட்டம் அரசால் வழங்கப்படுவதில்லை. இது நமது நாட்டு மக்கள்

இந்தோ-திபெத் மற்றும் சீன எல்லை பகுதியில் இந்திய திபெத் எல்லை பாதுகாப்பு படை வீராகள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவதால், நான் கவலைப்பட மாட்டேன். அவர்கள் மீது உறுதியாக இருக்கிறேன். எல்லையில் நமது வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவதால், இந்தியாவின் ஒரு அங்குல நிலத்தை கூட யாரும் அபகரிக்க முடியாது என்றார்.

நிகோசியா

# "பேச்சுவார்த்தைக்கு கட்டாயப்படுத்த முடியாது"



பயங்கர வாதத்தின் மூலம் இந்தியாவை ஒரு போதும் பேச்சுவார்த்தைக்கு கட்டாயப்படுத்த முடியாது" என்று அண்டை நாடுகளுக்கு மறைமுகமாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் எச்சரிக்கை விடுத்தார்.

சைப்ரஸ் நாட்டில் வாழும் புலம்பெயர்ந்த இந்தியர்களுடன் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் வெள்ளிக்கிழமை கலந்துரையாடல் நடத்தினார். அப்போது அவர் இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடாமல் அவர்களின் பயங்கரவாத செயல்களைக் கண்டித்தார். கலந்துரையாடல்களின் போது அமைச்சர் பேசியதாவது: "பயங்கரவாதத்தின் மூலமாக யாரும் இந்தியாவை பேச்சுவார்த்தைக்கு கட்டாயப்படுத்த முடியாது. இந்தியா அனைவருடனும் சுமூகமான உறவைப் பேணுவதற்கே விரும்புகிறது. ஆனால் அதற்காக, சுமூகமான உறவு என்பதற்கு மன்னித்துக் கொண்டே இருப்பது அல்லது விலகி நின்று பயங்கரவாதத்தை வேடிக்கை பார்ப்பது என்று அர்த்தம் கிடையாது. இதில் இந்தியா தெளிவாக உள்ளது.

இரண்டாவது, நிச்சயமாக நமது எல்லைகள். நமது எல்லைப் பகுதிகளில் சில பிரச்சினைகள் உள்ளன. கரோனா காலக்கட்டத்தில் எல்லைப் பிரச்சினைகள் கொஞ்சம் அதிகரித்துவிட்டன. எல்லை விவகாரத்தில் இந்தியா - சீனா உறவு சுமுகமாக இல்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். தன்னிச்சையாக எல்லைக் கட்டுப்பாடு கோட்டை மாற்றி அமைப்பதற்கு இந்தியா உடன்பட வில்லை என்பதால் அதில் சிக்கல் உருவாகி இருக்கிறது என்றார்.

இந்தியா

# இந்தியாவில் கருப்பு பூஞ்சை



சீனாவில் புதிதாக பரவி வரும் ஒமைக்ரோனின் மாறுபாடான பி.எப்.7 என்ற வைரஸ் பாதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்த புதிய வகை கொரோனாவால் இந்தியாவில் 4 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஜனவரி மாதத்தில் இந்தியாவில் கொரோனா பாதிப்பு அதிகாரிக்கும் வாய்ப்பு உள்ள நிலையில் அதை தடுக்கும் நடவடிக்கைகளை இந்தியா செய்து வருகிறது. முகக்கவசம், தனி மனித இடைவெளிகளை கடைபிடிக்கவும் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

இதனிடையே இந்தியாவில் கொரோனா 2-ம் அலை பரவியபோது, தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றவர்களில் சர்க்கரை அளவு அதிகமாக இருந்தவர்களுக்கு கருப்பு, வெள்ளை பூஞ்சை பாதிப்பு ஏற்பட்டது. இதனால் ஏராளமானோர் உயிரிழந்தனர். பிறகு, அதனை கட்டுப்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிலையில், பல மாதங்களுக்கு பிறகு உத்தரபிரதேசம் மாநிலம் காசியாபாத்தில் உள்ள ஹர்ஷ் மருத்துவமனையில் கொரோனா சிகிச்சையிலுள்ள 55 வயது முதியவருக்கு கருப்பு, வெள்ளை பூஞ்சை பாதிப்பு உறுதிசெய்யப்பட்டுள்ளது. அவருக்கு உரிய சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந்தியா

# பிரதமர் வேட்பாளராக ராகுல்



அடுத்த பாராளுமன்ற தேர்தலில் எதிர்க்கட்சிகள் சார்பில், பிரதமர் வேட்பாளராக யார் முன் நிறுத்தப்படுவார்கள் என்பதில் பல்வேறு கருத்துக்கள் நிலவி வருகின்றன.

இந்த பட்டியலில் சந்திரசேகர ராவ், சரத்பவார், நிதிஷ்குமார் பெயர்கள் இடம் பெற்றிருந்ததாக கூறப்பட்டது. இந்நிலையில் பாட்னாவில் செய்தியாளர்களிடம் பேசிய பீகார் முதலமைச்சரும், ஐக்கிய ஜனதாதள தலைவருமான நிதிஷ்குமார், பிரதமர் வேட்பாளராக போட்டியிட தமக்கு விருப்பம் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

பாரதிய ஜனதா கட்சியை எதிர்க்கும் கட்சிகளை ஒருங்கிணைப்பதில் தாம் உறுதியுடன் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். கூட்டணி கட்சியான காங்கிரஸ், ராகுல் காந்தியை பிரதமர் வேட்பாளராக முன் நிறுத்தினால், தமக்கு எந்த பிரச்சினையும் இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

புதிய இந்தியாவின் தேச தந்தை பிரதமர் மோடி என்று மகாராஷ்டிரா துணை முதல்வர் தேவேந்திர பட்னாவிஸின் மனைவி அம்ருதா பட்னாவிஸ் கூறியுள்ளது குறித்து கருத்து தெரிவித்த நிதிஷ்குமார், புதிய இந்தியாவின் புதிய தந்தை, தேசத்திற்காக என்ன செய்தார் என கேள்வி எழுப்பினார். சுதந்திர போராட்டத்திற்கும் அவர்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை, சுதந்திரப் போராட்டத்தில் ஆர்எஸ்எஸ் பங்கேற்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.


**ஜெனிவா**

# கொரோனா பாதிப்பு தகவலை வெளியிடவும்

சீனாவில் நிலவும் கொரோனா பாதிப்பு குறித்த தகவல்களை வெளியிடுமாறு உலக சுகாதார நிறுவனம் அந்நாட்டை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

சீனாவில் நிலவும் கொரோனா பாதிப்பு தொடர்பான உயர்மட்ட ஆய்வுக் கூட்டம் ஸ்விட்சர்லாந்தின் ஜெனிவாவில் உள்ள உலக சுகாதார அமைப்பின் தலைமையகத்தில் நடைபெற்றது.

உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானம், சீனாவின் தேசிய சுகாதார ஆணையம், தேசிய தொற்று கட்டுப்பாட்டு அமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில், சீனாவில் கொரோனா தொற்றை கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள், கொரோனா தொற்று பாதித்த பகுதிகள், கண்காணிப்புப் பணிகள், தடுப்பூசி, மருத்துவ சிகிச்சைகள், தொடர்பு வசதிகள் ஆகியவை குறித்து, சீன நிபுணர்கள், உலக சுகாதார அமைப்பிடம் விவரித்தனர்.



இவற்றைக் கேட்டுக்கொண்ட உலக சுகாதார அமைப்பு, கொரோனா தொற்றில் மரபணுக்களின் பங்கு குறித்த தகவல்கள், தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை, தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை, உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை, தடுப்பூசி எத்தனை பேருக்கு போடப்பட்டுள்ளது, குறிப்பாக 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் எவ்வளவு பேர் தடுப்பூசி போட்டுக்கொண்டுள்ளனர் ஆகிய விவரங்களை அளிக்குமாறு சீன நிபுணர்களை வலியுறுத்தியது. எனினும், இந்த விவரங்களை அவர்கள் வழங்கவில்லை.

கொவிட்- 19 விஷயத்தில் சீன நிபுணர்கள் மற்ற நிபுணர்களுடன் இன்னும் நெருங்கி வர வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள உலக சுகாதார அமைப்பு, வரும் ஜனவரி 3ம் திகதி நடைபெற உள்ள தொற்று நோய்களுக்கான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு கூட்டத்தில், இந்த விவரங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளது. இத்தகைய தகவல்கள் சீனாவுக்கும் உலகிற்கும் மிகவும் முக்கியம் என்றும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

**இஸ்லாமாபாத்**



## இந்து பெண்ணின் மார்பகம் தலையை துண்டித்து கொடூரம்

பாகிஸ்தானின் சின்ஜோரோ நகரில் , இந்து பெண் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். 40 வயது பெண் தலை துண்டிக்கப்பட்டு, மார்பகம் துண்டிக்கப்பட்டதாக பாகிஸ்தானின் இந்து சமூகத்தைச் சேர்ந்த முதல் பெண் செனட்டரான கிருஷ்ண குமாரி தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

“40 வயது விதவை கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டு உள்ளார். அவரது உடல் மிகவும் மோசமான நிலையில் சிதைக்கப்பட்டு உள்ளது. அவரது தலை உடலில் இருந்து வெட்டி எடுக்கப்பட்டு உள்ளது. தலை முழுவதும் உள்ள சதையை காட்டுமிராண்டிகள் அகற்றியுள்ளனர். பொலிஸ் குழுக்கள் சின்ஜோரோ பகுதிக்கு விரைந்து உள்ளனர் என அந்த டுவிட்டரில் கூறி உள்ளார்.

பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவர் ஜியாலா அமர் லால் பீல், சிதைக்கப்பட்ட உடல் வயலில் கண்டெடுக்கப்பட்டதாகவும், அந்தப் பெண்ணின் குடும்பத்தினரிடமிருந்து பொலிஸார் விவரங்களை சேகரித்து வருகின்றனர். பாதிக்கப்பட்டவரின் உடல் மற்றும் முகத்தில் இருந்து தோல் உரிக்கப்பட்டுள்ளது. அவருக்கு 4 குழந்தைகள் உள்ளனர். பிரேத பரிசோதனை செய்யப்பட்டு, மேலும் விசாரணை தொடர்ந்து நடந்து வருகிறது.

**பியொங்யாங்**

## அதிர வைக்கிறது வடகொரியா

வடகொரியா புத்தாண்டு தினத்திலும் ஏவுகணை சொதனை நடத்தி அதிர வைத்தது. இந்த ஏவுகணை சோதனைக்குப் பிறகு நடைபெற்ற முக்கிய ஆலோசனைக் கூட்டத்தில் கிம் ஜாங் அன் பங்கேற்றார்.



இந்தக் கூட்டத்திற்கு பிறகு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், “அணு ஆயுத உற்பத்தியை வேகமாக வடொரியா அதிகரிக்க இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் பிற பகைமை நாடுகளின் ஆபத்தான போக்குக்கு பதிலடி கொடுக்கும் வகையிலும் வடகொரியாவின் நலனை பாதுகாக்கும் நோக்கிலும் நாட்டில் இராணுவ பலம் இருமடங்காக்கப்படும் என்றும் கிம் ஜாங் அன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

**நியூயோர்க்**

சொந்த நாட்டில் வசிக்கும் மக்களை

## ஆக்கிரமிப்பாளர்களாக முடிவு செய்ய முடியாது

பாலஸ்தீன நிலப் பகுதியை இஸ்ரேல் நீண்ட காலமாக ஆக்கிரமித்திருப்பது மற்றும் இணைத்திருப்பதன் சட்டரீதியான விளைவுகள் குறித்து சர்வதேச நீதிமன்றத்தின் கருத்தை கோரும் தீர்மானம் ஐ.நா. பொதுச் சபையில் கொண்டு வரப்பட்டது.

கிழக்கு ஜெருசலேம் உட்பட ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பகுதியில் உள்ள பாலஸ்தீனர்களின் உரிமைகளைப் பாதிக்கும் இஸ்ரேலிய நடைமுறைகள் குறித்த இந்த வரைவுத் தீர்மானம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற வாக்கெடுப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. தீர்மானத்துக்கு ஆதரவாக 87 நாடுகள் வாக்களித்தன. இஸ்ரேல், அமெரிக்கா உள்ளிட்ட 26 நாடுகள் இதற்கு எதிராக வாக்களித்தன.

இந்தியா, ஜப்பான் உள்ளிட்ட 53 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்காமல் புறக்கணித்தன. பாலஸ்தீன பகுதியை கடந்த 1967 முதல் இஸ்ரேல் ஆக்கிர மித்துள்ளது. ஐ.நா.வுக்கான இஸ்ரேல் தூதர் கிலாட் எர்டன் பேசுகையில், “சொந்த நாட்டில் வசிக்கும் யூதமக்களை ஆக்கிர மிப்பாளர்கள் என்று எந்தவொரு சர்வதேச அமைப்பும் முடிவு செய்ய முடியாது” என்றார்.

**வத்திக்கான்**

## முன்னாள் பாப்பரசர் காலமானார்

கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைமை மத குருவாக இருந்த பெனடிக்ட், சனிக்கிழமை (31) காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 95 ஆகும்.

ஜெர்மனியின் பவேரியா மாகாணத்தில் உள்ள மார்க்டி என்ற கிராமத்தில் 1927ம் ஆண்டு ஏப்ரல் 16-ம் திகதி பிறந்தவர் பெனடிக்ட். இவரது இயற்பெயர் ஜோசப் அலாய்சியஸ் ரட்சிங்கர்.




கத்தோலிக்க கிறிஸ்தவ மதத்தில் தீவிர ஈடுபாடு கொண்ட இவர், அந்த மதத்தின் முக்கிய பொறுப்புகள் பலவற்றை வகித்தவர். ஆர்ச் பிஷப், கார்டினல் ப்ரீஸ்ட், கார்டினல் பிஷப், கார்டினல் என பல்வேறு பதவிகளை வகித்த ஜோசப் அலாய்சியஸ் ரட்சிங்கர், கடந்த 2005ம் ஆண்டு ஏப்ரல் 19ம் திகதி போப் ஆக பொறுப்பேற்றார்.

கடந்த சில நாட்களாக இவரது உடல்நிலை பாதிக்கப்பட்டதை அடுத்து, அவர் குணமடைய பிரார்த்திக்குமாறு போப் பிரான்ஸிஸ் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். இந்நிலையில், பெனடிக்ட் காலமானார்.

**வத்திக்கான்**

## அலங்கோலமாக காட்சியளிக்கும் டுவிட்டர் தலைமையகம்

டுவிட்டர் நிறுவனத்தை பெரும் தொகை கொடுத்து வாங்கிய எலான் மஸ்க் அதன் அன்றாட நடவடிக்கைகளில் பல்வேறு அதிரடி மாற்றங்களை மேற்கொண்டு வருகிறார்.

குறிப்பாக நிறுவனத்தின் செலவினங்களை குறைப்பதற்காக அவர் எடுத்து வரும் நடவடிக்கைகள் தொடர்ந்து விமர்சனங்களுக்குள்ளாகி வருகின்றன.

டுவிட்டரை வாங்கியதும் அதன் ஊழியர்களின் சரி பாதிக்கும் அதிகமானோரை பணிநீக்கம் செய்தார். துப்புரவு பணியாளர்கள் ஊதிய உயர்வு கேட்டபோது அதனை மறுத்துவிட்டார். இதனால் துப்புரவு பணியாளர்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

துப்புரவு பணியாளர்கள் இல்லாததால் டுவிட்டர் தலைமையகம் அலங்கோலமாக காட்சியளிக்கிறது.

இங்கிலாந்து பிரீமியர் லீக்:

# சமநிலையில் சிற்றி எவெர்ற்றன் போட்டி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றியின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணிக்கும், எவெர்ற்றனுக்கும் இடையிலான போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

சிற்றி சார்பாகப் பெறப்பட்ட கோலை எர்லிங்க் பிறோட் ஹலான்ட் பெற்றதோடு, எவெர்ற்றன் சார்பாகப் பெறப்பட்ட கோலை டெமரை கிரே பெற்றிருந்தார்.





இரண்டாவது டெஸ்ட் இன்று ஆரம்பிக்கிறது:

## நியூசிலாந்தை வீழ்த்துமா பாகிஸ்தான்?

பாகிஸ்தான், நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியானது கராச்சியில் இன்று காலை 10.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியானது வெற்றி தோல்வியின்றி முடிவடைந்திருந்தபோதும் அப்போட்டியில் நியூசிலாந்தே ஆதிக்கம் செலுத்தியிருந்தது.


அந்தவகையில் நியூசிலாந்தை வென்று தொடரைக் கைப்பற்றுவதற்கு பாகிஸ்தான் அதிகம் பணியாற்ற வேண்டியுள்ளது. குறிப்பாக அதன் பந்துவீச்சாளர்கள் நியூசிலாந்தின் விக்கெட்டுகளைக் கைப்பற்ற வேண்டியுள்ளது. ஆக, மொஹமட் வாஸிம், மிர் ஹம்ஸாவுக்குப் பதிலாக நசீம் ஷா, ஹஸன் அலி, ஷஹ்னவாஸ் டஹானி ஆகியோரில் ஒருவரோ அல்லது இருவரும் பிரதியிடக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன. தவிர, சஜிட் கானும் சில வேளைகளில் ஒரு வேகப்பந்துவீச்சாளரைப் பிரதியிடக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.

இதேவேளை, அப்துல்லாஹ் ஷஃபிக், ஷண் மசூட்டிடமிருந்தும் சிறப்பான தொடர்ச்சியான பெறுபேறுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

இந்நிலையில், நியூசிலாந்து அணியில் எதுவித மாற்றமும் இருக்காது என நம்பப்படுகின்றது.

ஸ்பானிய லா லிகா தொடர்:

## சமநிலையில் பார்சிலோனா – அஸ்பன்யோல் போட்டி



ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகா தொடரில், பார்சிலோனாவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணிக்கும், அஸ்பன்யோலுக்குமிடையிலான போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

பார்சிலோனா சார்பாகப் பெறப்பட்ட கோலை மார்கோஸ் அலோன்ஸோ பெற்றதோடு, அஸ்பன்யோல் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜோசெலு பெற்றிருந்தார்.

வட மாகாணத்தில் வரலாற்று சாதனை படைத்த

## முல்லை மாவட்ட வீரர்கள் கௌரவிப்பு



■ சண்முகம் தவசீலன்

வட மாகாண மென்பந்தாட்ட கிரிக்கெட் தொடரில், ஆண்கள் பிரிவில் சம்பியனாகி தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் சிறப்பாக இடம்பெற்றது

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து முதல் முறையாக தேசிய மட்டத்தில் மென்பந்தாட்ட கிரிக்கெட் தொடருக்குச் செல்லும் இந்த வீரர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் தேசிய மட்டப் போட்டியில் பங்குபெறும் வீரர்களுக்குவி. பி பவுண்டேசனின் ஸ்தாபகர் தெ. இந்திரதாஸின் சொந்த நிதிப் பங்களிப்புடன் வீரர்களுக்கான விளையாட்டுச் சீருடை வழங்கி வைக்கப்பட்டது.

தியாவட்டவான் அர்ரஷாத் கிண்ணத் தொடர்:

## சம்பியனான பேத்தாழை இளந்தளிர்



■ எச்.எம்.எம். பர்ஸான்

கோறளைப்பற்று மத்தி, வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தியாவட்டவான் அர் ரஷாத் விளையாட்டுக் கழகம் நடாத்திய மென்பந்தாட்ட கிரிக்கெட் தொடரில் பேத்தாழை இளந்தளிர் அணி சம்பியனானது.

17 அணிகள் பங்குபற்றிய இத்தொடரின் இறுதிப் போட்டியானது தியாவட்டவன் அரஃபா வித்தியாலய மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற நிலையில், அர் ரஷாத் அணியை வென்றே இளந்தளிர் சம்பியனானது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இளந்தளிர் அணி ஐந்து ஓவர்கள் முடிவில் 2 விக்கெட்டுகளை இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 88 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அர் ரஷாத் அணி, ஐந்து ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 73 ஓட்டங்களையே பெற்று 14 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 02 ஜனவரி 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.